DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1411 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 21, 2023

# "தந்தை செல்வா" அவர்கள் தனது அரசியல் பாதையை உள்ளார்ந்த விடுதலை நோக்கு கொண்டதாக அமைத்துக் கொண்டவர்

## தந்தை செல்வாவின் 125வது பிறந்த நாள் விழாவில் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் புகழாரம்

ஈழத் தமிழ் மக்களால் மாத்திரமல்ல தமிழ்நாடு மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களால் "தந்தை செல்வா" என்று மரியாதையோடு அழைக்கப்பெற்ற மறைந்த தமிழர் தலைவரம் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தனது அரசியல் பாதையை உள்ளார்ந்த விடுதலை நோக்கு கொண்டதாக அமைத்துக் கொண்டவர். இதன் காரணமாக சிங்கள பேரினவாதிகள் அவரின் நோக்கங்களை ஏற்றுக்கொள்ளாமல் அவரை புறக்கணித்தார்கள். அத்துடன் சிங்களக் காடையர்களை ஏவிவிட்டு அவரைத் துன்புறுத்தினார்கள். அவ்வாறு துன்பங்களை அனுபவித்திருந்தாலும் தனது அரசியல் பாதையில் தான் வகுத்துக் கொண்ட கோட்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ளாமல் இருந்தார்".

இவ்வாறு நேற்று முன்தினம் புதன்கிழமை ஸ்காபுறோவில் நடைபெற்ற தந்தை செல்வாவின் 125வது பிறந்த நாள் விழாவில் நினைவுப் பேருரை ஆற்றிய பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

# 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றத்தில் லோகன் கணபதி மற்றும் உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டார்



தற்போது கனடாவில் தங்கியுள்ள இலங்கை வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை மார்க்கம் தோர்ன்ஹில் சட்ட மன்றத் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அழைப்பின்பேரில் ஒன்றாரியோ சட்டசபை அமைந்திருக்கும் "குயின்ஸ் பார்க்" வளாகத்திற்கு சென்றிருந்தார் ஸ்ரீகஜன் தம்பதியையும் மற்றும் நண்பர்களையும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அங்கு அழைத்துச் சென்றார். அங்கு பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த மாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் இலங்கைப் பத்திரிகையாளர் ஸ்ரீகஜன் அவர்களையும் அவரது துணைவியார் அவர்களையும் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களையும் அவரது நண்பர் சங்கர் நல்லதம்பி அவர்களையும் வரவேற்று மகிழ்ந்து மாகாண பாராளுமன்றத்தில் அவர்களை பெயர்களை கூறிய வண்ணம் வரவேற்றனர். இங்கு காணப்படும் படம் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் எடுக்கப்பெற்றவையாகும்.

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI




# இலங்கையிலும் சீனத் தொலைக்காட்சி சேவை தொடங்குகிறது–கவலையில் தமிழர்கள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதியில் பெருமளவிலான நிலங்கள் சீனாவிற்கு வழங்கப்படவுள்ளது என்று தொடர்ச்சியாக வரும் கவலைகளிற்கு மத்தியில், சீனாவின் தொலைக்காட்சி ஒளிபரப்பும் இலங்கையில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஓரிரு நாட்களாக வடக்கு மாகாணத்தில் பலர் தமது தொலைக்காட்சிப் பெட்டியில் அலைவரிசைகளை மாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு அரச தொலைக்காட்சிகளிலும் சீனாவின் ஒளிபரப்பு வருவது கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வலிந்த சீனக் குடியேற்றங்களிற்கு வழி வகுக்குமோ என்று அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

இலங்கையில் தற்போது ஆக்கிரமித்துள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையின் மத்தியில் தற்போது சீனத் தொலைக் காட்சியும் தனது சேவையை இலவசமாக ஆரம்பிக்கின்றது.

அவ்வகையில் இலங்கையின் தொலைக்காட்சிகளில் சீன அலைவரிசை ஒன்று இலவசமாக பரீட்சார்த்த ஒளிபரப்பு சேவையை தற்போது ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே வடமாகாணத்தின் பல பகுதிகளில் கடல் அட்டை பண்ணைகளை நிறுவியுள்ள சீனா அங்குள்ள மக்களின் வாழ்வாதாரங்களை பெருமளவிற்கு சிதைத்துள்ளது. அதே போன்று இரணைமடு குளத்தின் தெற்கே 500 ஏக்கரையும், இயக்கச்சி பகுதியில் 200 ஏக்கரை சீனாவிற்கு இலங்கை அரசு தாரைவார்க்கவுள்ளது என்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்நிலையில் சீனத் தொலைகாட்சி நிகழ்ச்சிகள் அரச தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பாவது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

சீன ஒளிபரப்பு சேவையான சைனிஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேற் அலைவரிசையை தற்போது கேபிள் இணைப்பு இன்றி ஒளிபரப்பாகின்றது.

இலங்கை அரச தொலைக்காட்சிகளான ரூபவாகினி, ஐ ரீவி மற்றும் நேத்ரா ஆகிய ஒரே குழும ரீவிகள் நாட்டில் யூ.எச்.எவ் இல் வெளிவருகின்றன.

இவ்வாறு வெளிவரும் ஒளிபரப்பு சேவையானது கடந்த பெப்ரவரியில் இருந்து அலைவரிசை பங்காளிகளை கோரியிருந்தனர். இதன்போது இந்த சீன ஒளிபரப்பு சேவை அதனை பற்றியிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன அலைவரிசைகளிற்கு 5 இடத்தில் அலைவரிசை கோபுரங்கள் உண்டு அவை கொழும்பு, மடேல்சிம் (ஊவ), கொக்காவில். முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஒளிபரப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மீள் ஒளிபரப்பு கோபுரங்கள் மூலமே சீனத் தொலைக்காட்சி சேவையின் தற்போது இடம்பெறும் சோதனை முறையிலான ஒளிபரப்பு தெளிவாக இயங்குகின்றது.

இவ்வாறு இயங்கும் சைனிஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேர்க் முன்னர் ஓர் தொலைபேசி நிறுவன இணைப்பு மூலம் கட்டண சேவையில் இயங்கியபோதும் இவை தற்போது இலவச சேவையாக ஒளிபரப்பப்படவுள்ளது.

சீனாவின் இந்த உலகச் செய்திகள் ஒளிபரப்பு தற்போது இலங்கைக்கு வெளியே வேறொரு நாட்டிலிருந்து ஒளிபரப்பாகி அதை செய்மதி அலைவரிசெயூடாக இலங்கைக்குள் தரவிறக்கம் செய்யப்பட்டு அரசை தொலைக்காட்சியான ரூபவாகினி மூலம் உள்நாட்டில் இங்கே ஒளிபரப்பப்படுவதாக நம்பப்படுகிறது.

நாடுமுழுவதும் கேபிள் இணைப்பு சேவை மூலம் ஏனைய அலைவரிசைகளின் இணைப்பு வழங்கப்படும் அதேநேரம் இலங்கையின் சில அலைவரிசைகள் மட்டும் இலவசமாக பார்வையிட முடியும். இதேநேரம் சீனத் தொலைக்காட்சி அலவரிசை இலவசமாக ஒளிபரப்பாகும் சந்தர்ப்பத்தில் தமிழ்ச் சேவையும் ஆரம்பிக்கப. பட்டால் இதன் அடுத்த கட்டம் என்ன என்பதே கேள்வியாகவுள்ளது.

அதாவது அடுத்த கட்டமாக அதே சீனத் தொலைக்காட்சி நிறுவனம் தமிழில் தாயகத் தமிழர்களை இலக்கு வைத்து அடுத்த கட்டமாக தனது ஒளிபரப்பை தொடங்கக் கூடும் என்றே தமிழர் தரப்பு கவலைப்படுகிறது.





# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# அரசுக்கு எதிராக போர்க்கொடி பிடிக்கும் அனைவரையும் ரணில் பயமுறுத்துகின்றாரா?

ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த ஜனாதிபதி ஜே ஆர் என்னும் கொடியவன் கொண்டு வந்த 'ஆபத்தான' சட்டம் தான் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்' அப்போது மிகவும் கொடிதான ஆட்சியை நடத்தி தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை பகிரங்கமாகத் தெரிவித்து அரசியல் செய்து வந்தவர் ஜே. ஆர். அவரது ஆட்சிக் காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இந்த மோசமான சட்டம் காரணமாக துன்பங்களை அனுபவித்த வண்ணம் சிறைகளில் வாடி நின்றனர்.

இதேபோன்று தற்போது ஜனாதிபதிப் பதவியை 'தந்திரமாகப்' பெற்றுக் கொண்ட ரணில் என்னும் குள்ளத்தனம் கொண்ட அரசியல்வாதி யும் அவரது அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்பட்ட உள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என இலங்கை மக்கள் பல இடங்களில் போராடி வருகின்றனர்.

இவ்வாறான போராட்டங்கள் தமிழ் சிங்கள மக்கள் போர்க்குணத்தோடு பங்கெடுக்கும் வகையில் அங்கு ஏற்பாடு செய்யப்படுகின்றுத என்பதும் நாம் அறியக்கூடியதாக உள்ளது.

இந்த சட்டத்திற்கு எதிராகவும் இதை எதிர்க்க வேண்டியது மிகவும் அவசியமானது என்பதையும் வலியுறுத்தி வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்றது.இதன் போது வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் பிரதிநிதிகளுடன் மன்னார் மாவட்ட பெண்கள் இணைந்து குறித்த கவனயீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பு நிகழ்வு குறித்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. மன்னாரில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடனடியாக நிறுத்த கோரி குறித்த பெண்கள் அமைப்பினரால் அறிக்கை ஒன்றும் மக்கள் பார்வைக்கு வெளியிடப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

இது இவ்வாறிருக்க கண்ணியமான பணியைச் செய்யும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் அச்சுறுத்தும் வகையில் கல்வியை கட்டாய சேவையாக்க முயலும் 'மோசமான ஜனாதிபதி ரணிலின் எண்ணத்தை தகர்க்கும் வகையில் நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அண்மைக் காலங்களில் இலங்கையில் அரசுக்கு எதிராக நடத்தப்பெற்ற போராட்டத்தை ஆதரித்து நின்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அவர்களை ரணில் தலைமையிலான அரசின் பாதுகாப்பு படையினர் அடிக்கடி அச்சுறுத்தி வருவதும் சிறையில் அடைப்பதும் தொடர்ச்சியாக இலங்கையில் இடம்பெற்று வரும் விடயமாகும்

எனினும் தன்னை கைது செய்வார்கள் என்று நன்கு தெரிந்தும் கூட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்த கருத்துக்கள் மிகவும் போர்க்குணம் கொண்டகையாக உள்ளன.

கட்டாய சேவையாக்கவோ, அவசரகாலத்தின் கீழ் பரீட்சை குழுவை அமர்த்தவோ, பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதிலிருந்து விலகும் ஆசிரியர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவோ அல்லது அவர்களது சொத்துக்களை அபகரிக்கவோ ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கை அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பரீட்சைகள் தாமதப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களின் பிரச்சினையை விவாதம் மூலம் தீர்க்காமல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அச்சுறுத்திய ஜனாதிபதி, இவற்றைச் செய்வதால், இந்த மக்களையும் அச்சுறுத்த முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் இதுவரை விநியோகிக்கப்படவில்லை, பாடசாலை சீருடைகள் முறையாக விநியோகிக்கப்படவில்லை. கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் நிலை ஜனாதிபதிக்கு இருந்தால் மேற்கண்ட குறைபாடுகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் ஜனாதிபதியின் தீர்மானத்தை அடக்குமுறை கூட பங்கரவாத தடுப்பு நடவடிக்கையாகவே போராடுகின்றவர்களுக்கு தெரிகின்றது என கொழும்பில் மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## கனடா எழுத்தாளர் 'வீணைமைந்தன்' நூல்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக நூலக மண்டபத்தில் வெளியீடு

கனடா 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கலந்து கொள்கின்றார் கனடா மொன்றியால் வாழ் எழுத்தாளர் 'வீணைமைந்தன்' அவர்கள் எழுதிய மூன்று நூல்களான 'மண்ணும் மனசும்'. "மறக்கத் தெரியாத மனசு" மற்றும் 'தமிழ்ச் சினிமாவில் மகாகவி பாரதியாரின் பாடல்கள்" ஆகியவற்றின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28-04-2023 அன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் **பேராசிரியர் நா. சண்முகலிங்கன்** அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் **பேராசிரியர் சி. சிறீ சற்குணராஜா** அவர்களும் சிறப்பு விருந்தினராக. கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் **ஆர். என். லோகேந்திரலிங்கம்** அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நூல்கள் பற்றிய விமர்சனங்கள் மற்றும் சிறப்புரைகள் ஆகியவற்றை ஆற்றுவதற்காக யாழ் மண்ணில் கல்வி மற்றும் கலை இலக்கிய துறைகளில் பங்காற்றி வரும் அறிஞர் பெருமக்கள் அழைக்கப்பெற்றுள்ளனர்.

## "தந்தை செல்வா" அவர்கள் தனது அரசியல் பாதையை உள்ளார்ந்த விடுதலை நோக்கு...(முன் பக்கத் தொடர்ச்சி)

"தந்தை செல்வா நினைவு அறக்கட்டளை" அமைப்பு நடத்திய மேற்படி விழாவை தமிழ்த் தேசிய செயற்பாட்டாளரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்னாள் தலைவருமான குணநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்.

தந்தை செல்வா அவர்களின் பேத்தியான மைதிலி அவர்கள் வரவேற்புரையை ஆற்றினார்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள் தொடர்ந்து " தந்தை செல்வாவின் சிறந்ததும் நேர்மையான தலைமைத்துவப் பண்புகள் கொண்டதுமாக அமைந்த அவரது போர்க்குணத்தை எள்ளி நகையாடினர். சில சிங்களத் தலைவர்களை விட பலரால் நிந்திக்கப்பட்டிருந்தாலும் தனது இலட்சியத்தை கைவிட்டு விடாமல் இறுதிவரை போராடியவர் அவரே! என்று குறிப்பிட்டார்.

கனடா வாழ் நக்கீரன்- தங்கவேல் அவர்களும் தந்தை செல்வா அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல முக்கிய நிகழ்வுகளை எடுத்து விளக்கினார்.

ஒன்றாரியோ மாகாண சபையின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் தனது உரையை வழங்கிய பின்னர் "தந்தை செல்வா அறக்கட்டளை " அமைப்பினரை கௌரவிக்கும் வகையில் பாராளுமன்றம் சார்பான வாழ்த்து மடலை வழங்கினார். பின்னர் அங்கு வெளியிடப்பெற்ற தந்தை செல்வா தொடர்பான நினைவலைகள் அடங்கிய நூலின் பிரதிகள் பல அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் ஏ9 வீதியில் இருந்து 1.6 கிலோமீற்றர் தூரத்தில் புத்தூர் - மீசாலை AB 32 வீதியில் 19.5 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 778 883-9894 / 604-767-9549
மின்னஞ்சல் - kirupakarankathiravelu@gmail.com

இயக்கச்சியில் காணி விற்பனைக்கு உண்டு (40 ஏக்கர்)

கிளிநொச்சி கச்சேரியில் பதியப்பட்ட, பச்சிலைப்பள்ளி பளை பிரதேச சபை பிரிவில் இயக்கச்சியில் A9 வீதியில் இருந்து 3 கி.மீ தொலைவில் ஆளியவளை வீதியில் 40 ஏக்கர் பிரயோசனங்கள் கொண்ட காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு (25 ஏக்கர் உறுதி, 15 ஏக்கர் Permit).

தொடர்புகளுக்கு: 1-519-222-5191 அல்லது 94-777750308

# மன்னார் கல்விவலயப் பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் திறந்து வைப்பு






மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட பத்து கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் இம்மாதம் 3,4,5ஆம் திகதிகளில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டன.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பும் (International Medical Health Organisation - USA) இரட்ணம் பவுண்டேசன் அமைப்பும் (Ratnam Foundation - UK) இணைந்து பன்னிரண்டு பாடசாலைகளுக்கு திறன் பலகைகளை வழங்கியது மட்டுமன்றி இப்பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு, திறன் பலகைகளைக் கையாள்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வளவாளர்களைக்கொண்டு பயிற்சிகளையும் வழங்கியிருந்தது.



இத்திறப்பு விழாக்கள் கொக்குபடையான், சவேரியார்புரம், நொச்சிக்குளம், சிறுக்கண்டல், அகத்திமுறிப்பு, முருங்கன், புதுக்கமம், சாந்தபுரம் மற்றும் சிறுத்தோப்பு கிராமப்புறங்களில் பாடசாலைரீதியாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர், திட்டமிடல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் மட்டுமன்றி IMHO-USA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடந்தேறியது.

இத்திறப்பு விழாக்களில் ஏற்கெனவே பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தது. இதன்போது மாணவர்களும் திறன் பலகைகளை கையாண்டது கண்டு திறப்புவிழாவில் கலந்து கொண்ட பெற்றோர்களும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்கள். ஆசிரியர்களுக்கான தொடருறு பயிற்சிகளை வலயத்திற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்களை கொண்டு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் மாதாந்த அறிக்கைகளை தமக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் வலயக்கல்விப்பணிப்பாளர் அதிபர்களை வேண்டிக் கொண்டார்.

# முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையினை கட்டுப்படுத்த கோரி வட்டுவாகல் கடற்படை முகாமை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்



**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு கடலில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சுருக்குவலை மற்றும் ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கோரி வட்டுவாகல் பாலத்தில் இருந்து கோட்டபாய கடற்படை முகாம் வரை சென்ற மீனவர்கள் அங்கு கடற்படை முகாமை முற்றுகையிட்டு தங்கள் கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தினை சேர்ந்த கடற்தொழில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இந்த கவனயீர்ப்பு போராட்டநடவடிக்கையின்போது முல்லைத்தீவு கடலினை நம்பி 5ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலையில் சாலை தொக்கம் கொக்கிளாய் வரையான கடற்பரப்பில் சுருக்குவலை ஒளிபாச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதனால் மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் சிறுமீன் இனங்கள் அழிக்கப்படுகின்றன.

மீனவர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு சட்டவிரோத கடற்தொழில் நடவடிக்கையினை இலங்கை கடற்படையினர் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கடற்தொழில் அமைச்சர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய காவல் அரண்களை அமைத்து கட்டுப்படுத்தி தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.






இந்த நிலையில் கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளை தளபதிற்கும் கோட்டபாய கடற்படை முகாம் தளபதிற்கும் மீனவர்கள் மனு கையளித்துள்ளதுடன். கடற்தொழில் அமைச்சருக்கும் விடையத்தினை தெரியப்படுத்தி இன்று இரவிற்குள் முடிவு சொல்லப்படும் என அறிவித்துள்ளதை தொடர்ந்து மீனவர்கள் கலைந்து சென்றுள்ளார்கள்.

# மன்னார் வங்காலை பறவைகள் சரணாலய பகுதியில் தூய்மையாக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு




**- மன்னார் நிருபர் (18-04-2023)**

மன்னார் மாவட்டத்தின் அடையாளமாகவும், இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசமாகவும் காட்சியளிக்கும் வங்காலை பறவைகள் சரணாலய பகுதியில் செவ்வாய்க்கிழமை (18) காலை தூய்மையாக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.

கறிராஸ் வாழ்வுதயத்தின் பதில் இயக்குனர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமையில்,மன்னார் கறிராஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினர் மிசறியோ நிதியுதவியுடன் குறித்த சரணாலயத்தை சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் வழிகாட்டலில், மன்னார் வன ஜவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து வாழ்வுதயப் பணியாளர்கள், இலக்கு கிராம இளைஞர்கள் பங்களிப்பில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.





அத்துடன், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் "இது பறவைகள் சரணாலயம்" எனும் விளம்பரப் பலகையும், "குப்பை போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது" எனும் பதாதைகளும் இத்திட்டத்தின் கீழ் பிரதான வீதிக்கு அருகாமையில் நாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சரணாலயத்தில் வரலாற்று முக்கியத்துவம், அழகின் மகத்துவம், புரியாத சிலர் தமது வீட்டுக்கழிவுகளை இங்கு கொட்டுவதும், பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள் என்பவற்றை இவ்விடத்தில் வீசுவதும் கவலைக்குரிய விடயமாகும்.

கழிவுப் பொருட்கள் இங்கு வாழும் உயிரினங்களின் உயிர் வாழ்தலுக்கும், இருத்தலுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அடையாளமாகவும், இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசமாகவும் காட்சியளிக்கும் இச் சரணாலயத்தை பாதுகாக்க வேண்டியதும், பறவைகள், விலங்குகள் எனப் பல்லுயிர்கள் வாழ்வதற்கு உகந்த இடமாக மாற்றுவது எம் ஒவ்வொருவருடைய கடமையும், பொறுப்பும் ஆகும் என குறித்த சிரமதானத்தை ஆரம்பித்து வைத்த கறிராஸ் வாழ்வுதய பதில் இயக்குனர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தெரிவித்தார்.

# மன்னார் பரப்பாங்கண்டல் இரட்டை மாட்டு வண்டி திடலில் சிறப்பாக இடம்பெற்ற இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி – 35 ஜோடி காளைகள் பங்கேற்பு



**- மன்னார் நிருபர் (16-04-2023)**

புத்தாண்டையொட்டி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி சனிக்கிழமை (15) மாலை மன்னார் பரப்பாங்கண்டல் இரட்டை மாட்டு வண்டி திடலில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 35 ஜோடி காளைகள் குறித்த போட்டியில் கலந்து கொண்டிருந்தது.

குறித்த போட்டியானது A,B,C,D,E ஆகிய 5 பிரிவுகளில் இடம் பெற்றது.

இதன் போது குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைப்பதற்கு 404 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு — பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர்

வவுனியா செட்டிகுளம் முகத்தான்குளம் கால்வாய் அமைப்பதற்கு 404 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவருமான குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா செட்டிகுளம் முகத்தான் குளத்தின் வயல் நிலங்களுக்கு சீரான தண்ணீர் வரத்து இல்லாமையினால் பல ஏக்கர் காணிகள் விதைக்கப் படாமல் இருந்து வருகின்றன.

சமீபத்தில் வவுனியாவில், நீர் பாசன அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பினை சரியாகப் பயன்படுத்தியதால் 404 மில்லியன் ரூபாய் கால்வாய் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.



இக்கால்வாய் 8 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட உள்ளது. இதனால், 950 ஏக்கர் நிலம் பயன்படும் என்று விவசாயிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நீர்ப்பாசன திணைக்கள வவுனியா மாவட்ட பொறியியலாளர் மற்றும் உத்தியோ கத்தர்களுடன் நேரில் சென்று விவசாயிகள் அமைப்பினரை சந்தித்து திட்டம் தொடர்பாக தெரிவித்தோம்.

மேலும் 10 குளங்களை புனரமைப்பதற்கான அனுமதி பெற்றுக் கொண்டோம். அதற்கான நிதியும் விரைவில் கிடைக்கப் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் தியாக தீபம் அன்னை பூபதியின் 35 வது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு

- மன்னார் நிருபர்





தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்ணாநோன்பு இருந்து உயிர் தியாகம் செய்த தியாக தீபம் அன்னை பூபதியின் 35 வது ஆண்டு நினைவு தினம் மன்னாரில் புதன்கிழமை (19-04-2023) அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சி மன்னார் கிளையின் ஏற்பாட்டில் காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது தியாக தீபம் அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதன் போது கட்சியின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை தியாக தீபம் அன்னை பூபதி நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு 19-04-2023 காலை 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மத தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கனடியக் கலைஞர்களுக்கு நன்கு அறிமுகமான நடனக் கலைஞர் சாகிர் உசைன் அவர்களுக்கு மற்றுமொரு பதவியை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்



கனடியக் கலைஞர்களுக்கு நன்கு அறிமுகமான நடனக் கலைஞர் சாகிர் உசைன் அவர்களுக்கு மற்றுமொரு பதவியை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியுள்ளார். ஏற்கெனவே தமிழ்நாடு அரசின் இசைப் பள்ளிகளுக்கான "கலையியல் அறிவுரைஞர்" என்னும் உயர் பதவியை வழங்கிய முதல்வர் அவர்கள் தற்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளராக அவரை நியமனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக எமது கனடா உதயன் ஆசிரிய பீடம் நடனக் கலைஞர் சாகிர் உசைன் அவர்களோடு தொடர்பு கொண்டு பாராட்டுத் தெரிவித்தபோது அவர் "நம் கழகத்தின் தலைவர் அவர்களுக்கும், பொதுச் செயலாளருக்கும், இளைஞரணி செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துக் கழக நிர்வாகிகளுக்கும், மூத்த கழக உறுப்பினர்களுக்கும் எனது உற்ற நண்பர்கள், வழிகாட்டிகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். அத்துடன் கனடாவிலிருந்து என்னைத் தொடர்பு கொண்டு வாழ்த்திய அனைத்து நண்பர்கள். கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றி. தலைவர் கொடுத்துள்ள இப்பொறுப்பை ஏற்று இனி முன்பைவிட ஊக்கத்துடன் கழகப்பணி ஆற்றுவேன் என உறுதியளிக்கிறேன்" அவர் தெரிவித்துள்ளார்.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வேண்டாம் — மன்னாரில் கவனயீர்ப்பு நிகழ்வு முன்னெடுப்பு

**- மன்னார் நிருபர் (20-04-2023)**

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்பட்ட உள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சுற்று வட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டின் பிரதிநிதிகளுடன் மன்னார் மாவட்ட பெண்கள் இணைந்து குறித்த கவனயீர்ப்பு நிகழ்வை முன்னெடுத்தனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்திற்கு மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அவசியமற்றது என்பதை வலியுறுத்தி குறித்த பெண்கள் அமைப்பினரால் கவன ஈர்ப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு நிகழ்வு குறித்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. மன்னாரில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் சுமார் 200 பேர் வரை கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடனடியாக நிறுத்த கோரி குறித்த பெண்கள் அமைப்பினரால் அறிக்கை ஒன்றும் மக்கள் பார்வைக்கு வெளியிடப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்ற இப்தார் நிகழ்வு

**- மன்னார் நிருபர் (20-04-2023)**





மன்னார் மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் இப்தார் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் வியாழக்கிழமை (20) மாலை மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டச் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இடையில் இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கலந்து கொண்டார்.

நிகழ்வில் இப்தார் நிகழ்வுக்கான விசேட உரை இடம் பெற்றதோடு சர்வமத தலைவர்களின் விசேட உரைகளும் இடம் பெற்றது.



# குரங்குகளின் ஏற்றுமதி குருட்டுத்தனமான முடிவு சூழல் விரோதமானதும் சாத்தியம் இல்லாததும்

**- ஐங்கரநேசன் சாடல்**

குரங்குகளினால் விவசாயத்தில் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் செங்குரங்குகளைச் சீனாவின் மிருகக்காட்சிச் சாலைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்ததையடுத்துப் பலத்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து, கொழும்பு சீனத்தூதுவராலயம் இவ்வாறானதொரு கோரிக்கையைத் தாம் முன்வைக்கவில்லையெனத் தற்போது அறிவித்துள்ளது. சீனாவின் தனியார் விலங்குப் பண்ணையொன்றின் எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் ஏற்றுமதி முடிவெடுத்த விவசாய அமைச்சும் சுருதி இறங்கி முதற்கட்டமாக ஐந்நூறு குரங்குகளை அனுப்ப இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இம்முடிவு குருட்டுத்தனமானதும் சூழல் விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சாடியுள்ளார்.

இலங்கையில் இருந்து சீனாவுக்குக் குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்றும் சீனத் தூதுவராலயம் தெரிவித்திருக்கிறது. ஆனால், சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும் குரங்குகள் உட்பட அழிந்துவரும் பல காட்டுயிரிகளின் மிகப்பெரும் கறுப்புச்சந்தையாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது. சீன உணவகங்களில் குரங்கிறைச்சி அதிவிருப்பத்திற்குரிய தெரிவு என்பதாலும் ஆய்வகங்களில் குரங்குகள் சோதனை விலங்குகளாக அதிகம் தேவைப்படுவதாலும் சீனாவில் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவுகிறது. இதனை ஈடுகட்டவே, ஜீவகாருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்ப மிருகக்காட்சிச் சாலைகளுக்கென்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் (key stone species) கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே, குரங்குகளினால் விவசாயத் துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
## மனம் திறக்கிறார் மனோ கணேசன்
### (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 11)

**"ஶ்ரீலங்கா மிலிடரி தங்கள் (முன்னாள்) தளபதியை உதைத்து இழுத்து போன கதை"**




• நானும், ஜேவிபி தலைவர் சோமவன்ச, எம்பிகள் ஹந்துன்நெத்தி, ரவுப் ஹக்கீம் ஆகியோரும் பொன்சேகாவுடன் பேச தயாரானோம். அப்போதான் அச்சம்பவம் நிகழ்ந்தது.

• "என் கிட்டே வர வேண்டாம், கைவைக்க வேண்டாம்." என்ற சரத் பொன்சேகா, கூடவே சுந்தர சிங்களத்தில் தூஷண வார்த்தைகளையும் தாராளமாக பயன்படுத்தி, கடும் கூச்சல் போட்டார்.

• அந்த அறையிலே துப்பாக்கி சமர் நடக்கப்போறதோ, இவர் திருப்பி சுடப்போறாரோ, "என்னடா இது? இதில் நாமும் அநியாயமாக பலியாக போறோமோ" என நான் மிக வேகமாக நினைத்தேன்.

• புலிகளுக்கு எதிராக போரை வென்ற தளபதி பொன்சேகாவை, அரசியல் நோக்கில் "புலி" என குற்றஞ்சாட்டப்பட்ட தமிழனான என் கண் முன், அதே ஶ்ரீலங்கா ராணுவ வீரர்கள், மிருகத்தை போன்று, அடித்து, இழுத்து போனார்கள்.

2010 ஆம் வருட ஜனாதிபதி தேர்தலில் எமது பொது வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகா வெல்லவில்லை.

அந்த தோல்வியுடன், மீண்டும் திரும்பி ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரியாக வாழ விரும்பாத அளவிற்கு அவருக்குள் அரசியல் புகுந்து விட்டது.

2010 பெப்ரவரி, கொழும்பு ரோயல் கல்லூரி அருகில் அவரது அலுவலகத்தில், கலந்துரையாடலுக்கு எதிரணி கட்சி தலைவர்களை சரத் அழைத்தார்.

மூன்று கட்சிகள். ஜேவீபி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஶ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்.

நான் அந்த ரோயல் மாவத்தை மேல் மாடி அறைக்குள் நுழையும் போது, ஜேவிபியின் அன்றைய தலைவர் அமரசிங்க, எம்பி சுனில் ஹந்துன்நெத்தி, நண்பர் ரவுப் ஹக்கீம் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.




என்னை வரவேற்ற பொன்சேகா கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

பின்னாளில் பொன்சேகா மீதான வழக்கில் அரசாங்கம் கூறியதை போல, அந்த கலந்துரையாடல் அரசாங்கத்தை சதி செய்து கவிழ்க்கும் தேச விரோத கலந்துரையாடல் அல்ல.

உண்மையிலேயே, தேச துரோக சதி உரையாடலில் ஈடுபட்டோம் என ராஜபக்ச அரசு, என்னையும், ஹக்கீமையும், சோமவன்சவையும் கைது செய்யும் என நினைத்தேன்.

ஆனால் அப்படி நடக்கவில்லை. அரசுக்கு உண்மை தெரியும். சும்மா, பொன்சேகாவை உள்ளே தள்ள குற்றம் சாட்டினார்கள்.

உண்மையில் பொன்சேகா, எதிரணியின் பிரதான கட்சியான ஐதேக தலைவர் (இன்றைய அதிபர்) ரணிலுடன் தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி கட்டத்தில் முரண்பட்டுக்கொண்டார்.

(தேர்தலுக்கு முன் ரணிலை பற்றி குறிப்பிடும்போது, "சார்" என்ற பொன்சேகா, இறுதி கட்டத்தில் "ஹு" (அவன்) என்றார்..!)

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் எப்படி தாம் பொது எதிரணியாக போட்டியிடுவது என்பது பற்றியே சரத் பேச நினைத்தார்.

உரையாடலில், பொன்சேகாவின் செயலர் சேனகவும் வந்தமர்ந்தார். (இன்றைய துணை அமைச்சர் டயானா கமகேவின் கணவர்) ஒரு அரைமணி கடந்திருக்கும்.

திடீரென கதவை தட்டி அனுமதி பெறாமல் ஒரு சீருடை இராணுவ அதிகாரி அறையின் உள்ளே வந்தார். கையில் ஆயுதம் இல்லை.

அவர் பெயர் மானவடு என பிறகு அறிந்தேன். உள்ளே வந்த விதம் அசந்தர்ப்பமாக இருந்தாலும், பொன்சேகாவின் ராணுவ சகா என நான் நினைத்தேன்.

வந்தவரில் ஒரு பதட்டம். நிமிட தாமதத்தின் பின், எங்களை பார்த்து, "Please go out of the room" (தயவு செய்து அறையை விட்டு வெளியேறுங்கள்!) என பதட்டமாக கூறினார்.

அதில் தெளிவில்லாததால் அவரை பார்த்து நான் கேட்டேன், "What..? Tell again" (என்ன., மீண்டும் சொல்லுங்கள்?). அவர் திரும்பவும் சொன்னதை சொன்னார்.

நான் சிங்களத்தில் பதில் கூறினேன். "உங்களுக்கு எம்மை தெரியாதா? நாம் மனோ கணேசன், ரவுப் ஹக்கீம், சுனில் ஹந்துந்நெத்தி, சோமவன்ச அமரசிங்க."

இப்படி விளக்கமாக நான் சிங்களத்தில் கூறியும், அவர் வெள்ளைக்கார மொழியை விடவில்லை.

பொன்சேகாவை நோக்கி கையை நீட்டி, "I come to arrest him" (அவரை கைது செய்ய வந்துள்ளேன்!) என்று உடைந்த பேச்சுவழக்கு ஆங்கிலத்தில் கூறினார்.

நான் சிங்களத்தை விடவில்லை. "இதோ அவர். பேசிக்கொள்ளுங்கள்" என்றேன்.

இவை அனைத்தும் நிகழ சில வினாடிகள்.

நிலைமையை ஊகித்த கோப கனல் பொன்சேகா, "என்னை அரெஸ்ட் செய்ய நீ யார்?" என்று கேட்டார்.

சரத்தை நெருங்கிய மானவடு "சார், ஒத்துழையுங்கள். மேலிடத்து உத்தரவு. உங்களை கைது செய்து கொண்டு செல்ல வேண்டும்." என்றார்.

இப்பொழுது மானவடுவிற்கு சிங்களம் வந்தது.

பொன்சேகா ஆத்திரத்துடன் கூக்குரலிட்டார். "என்னடா மேலிடத்து உத்தரவு...?". இந்த இடத்திலிருந்து சுந்தர சிங்கள தூஷண வார்த்தைகளும் வந்தன.

"நான் இப்போது ராணுவத்தில் இல்லை. சிவில் மனிதன். போய் பொலீசை கூட்டி வா." என்றார்.

சற்றே திகைத்த மானவடு திரும்பி, கதவிற்கு பக்கத்தில் நின்றிருந்த இன்னொரு அதிகாரியை அழைத்தார்.

விரைவாக உள்ளே வந்த அந்த இராணுவர் பொன்சேகாவின் பக்கத்திலே போய், ஒரு ஆவணத்தை சிங்களத்தில் வாசித்தார்.

அது இராணுவ குற்ற பத்திரிகை. கடும் சிங்களம். பல்வேறு குற்றச்சாட்டுகள் புரிந்தன.

அந்த கலவர அதிகாரியின் கைகள் நடுங்கின. வார்த்தைகள் குளறின. நேற்று வரை தமக்கு கட்டளையிட்ட தளபதிக்கு எதிராக, குற்றப்பத்திரிகை வாசிக்க வேண்டி வந்ததே..!

அப்போது, அங்கே இருந்த சேனக சில்வா, (அவரும் முன்னாள் ஶ்ரீலங்கா இராணுவர்) எதிர்ப்பை வெளிப்படுத்த, ஏதோ சொல்லி வம்பை வாங்கினார்.

கோபமடைந்த மானவடு அறைக்கு வெளியே நின்ற ஆயுத படையினருக்கு ஆணையிட்டார்.

"இவன்தான் அடுத்தவன். இவனை பிடியுங்கள்." என்று கூற, தடதடவென வந்த சிப்பாய்கள், சில்வாவின் கைகளை பின்புறமாக இறுக்கி, கழுத்திலே கையை வைத்து, அடித்தே இழுத்து சென்றனர்.

திரும்பவும் மானவடு இப்பொழுது உரத்த குரலில் "சார், வாங்க சார் வாங்க!" என்று பொன்சேகாவை அழைத்தார்.

சரத் விடாப்பிடியாக "நான் சொன்னது உனக்கு விளங்கலையா, முட்டாளே? போய் போலிசை கூட்டிக்கொண்டு வா!".

"ஆம். போலீசாரை கூட்டி வாருங்கள்" என்று ரவூப் ஹக்கீம் இடைமறித்தார்.

ஒரு கணம் திகைத்த, மானவடு சுதாகரித்துக்கொண்டு, தன் கைபேசியை அழுத்தியபடி அறைக்கு வெளியே சென்றார்.

வெளியே அவர் யாருடனோ உரையாடுவது கேட்டது. நிலைமையை விளக்கி, மேலிட ஆணையை பெறுகிறார் என விளங்கியது.

சற்று நேரத்தில் மானவடு வேகமா வந்தார். அவரது முகத்தில் மாற்றம். "சார்" என்ற கௌரவம் இருக்கவில்லை.

பெருந்தொகை ஆயுத இராணுவ வீரர்கள், மிக பெரிதல்லாத அந்த அறைக்குள் வந்தார்கள்.

இது என்ன ரொக்கட் சயன்சா..? "அடேய், நீ அவனை இழுத்து வராவிட்டால், அவனையும், உன்னையும் இழுத்துவர வேண்டி வரும்." என்று மானவடுவிற்கு மேலிடத்தில் இருந்து, கடும் எச்சரிக்கை கிடைத்திருக்கிறது என நான் மிக சுலபமாக ஊகித்தேன்.

கோபமடைந்த சிங்க பொன்சேகா, தடுமாறி உறும ஆரம்பித்தார். போலீசாரை தவிர வேறு எவரிடமும் தான் சரணடைய மாட்டேன் என்று திரும்பத் திரும்ப கூறினார்.




அறையில் நிலைமை மோசமடைந்தது.

ராணுவத்தை பற்றி நன்கு தெரிந்ததாலோ என்னவோ, நடப்புகளை கண்ட, ஜேவீபி தலைவர் சோமவன்சவும், எம்பி சுனிலும் தமது இருக்கையிலிருந்து எழுந்து வந்து, நானும், ரவுப்பும் அமர்ந்திருந்த அகன்ற இருக்கையில் வேகமாக இடம் பிடித்து அமர்ந்து கொண்டார்கள்.

அடுத்தது, இச்சம்பவத்தின் போது அவர்கள் இருவரும் எதுவுமே பேசவில்லை.

மானவடுவின் கட்டளைப்படி சுமார் பத்து பேர்வரை வீரர்கள், தமது ஆயுதங்களை மற்றவர்களிடம் கையளித்துவிட்டு, பொன்சேகாவை அவரது இருக்கையில் இருந்து எழுப்பி இழுத்து செல்ல முயன்றனர். இன்னும் சிலர் ஆயுதங்களுடன் சுற்றி நின்றனர். சிறிய அறை.

பொன்சேகா "என் கிட்டே வர வேண்டாம், என் மேல் கைவைக்க வேண்டாம்." என கடும் கூச்சல் போட்டார்.

இடையிலே நல்ல பல சுந்தர சிங்கள வார்த்தைகளையும் உதிர்த்தார். கனல் பறந்த அவர் கண்களில் அவமானம் தெரிந்தது.

இராணுவ வீரர்கள், இழுத்து செல்ல, பொன்சேகா மீது கையை வைத்த போது, பொன்சேகா குனிந்து தனது இருக்கையின் கீழே எதையோ தேடினார்.

இருக்கையின் கீழே வைத்திருக்கும் துப்பாக்கியை தேடறாரோ, அதை எடுத்து இவர்களை சுடப்போறாரோ, அந்த அறையிலே துப்பாக்கி சண்டை நடக்கப்போறதோ, "என்னடா இது, எமக்கு வந்த சோதனை.? இதில் நாமும் பலியாக போறோமோ" என நான் மிக வேகமாக நினைத்தேன்.

பின்னாளில் இது பற்றி பேசியபோது ஹக்கீம் தானும் அப்படிதான் நினைத்ததாக கூறினார்.

சோமவன்சவும், சுனிலும் கூட அப்படித்தான் நினைத்தார்கள் என்பது அப்போதே அவர்களின் முகங்களில் தெரிந்தது. அவர்கள் அனுபவசாலி கொம்ரேட்ஸ்..!

இறுதியில் ஆறடி உயர திடகாத்திர பொன்சேகாவை இழுத்து போனார்கள்.

கைகளையும், கால்களையும் பலர் பிடித்துக்கொண்டார்கள்.



எனக்கு ஞாபகம் இருக்கும் வகையில் மானவடுவின் கை பின்புறமாக பொன்சேகாவின் கழுத்தை பிடித்துக்கொண்டிருந்தது.


திமிறிய பொன்சேகாவின் கால் பட்டு அங்கிருந்த இரும்பு அலுமாரியின் கொக்கி உடைந்தது. பல ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின.

அறையில் இருந்து இறுதியாக சரத்தின் கழுத்தில் கையை வைத்தபடி வெளியேறிய மானவடு, திரும்பி எங்களை பார்த்து, "இங்கேயே இருங்கள், வெளியே வர வேண்டாம்." என்றார்.

(தொடர்ச்சி 10 பக்கம்)

# தலைப்புச் செய்தியாகிய குரங்கு

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



இலங்கை அரசாங்கம் ஒரு லட்சம் குரங்குகளை சீனாவுக்கு விற்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் மொத்தம் 30 லட்சம் குரங்குகள் உள்ளதாக கணிப்பிடப்படுகிறது. ஆனால் இக்குரங்குகள் அண்மை ஆண்டுகளில் விவசாயத்துக்கு பெருநாசத்தை விடுவிப்பதாக விவசாயிகள் முறையிடுகின்றார்கள். குறிப்பாக ஆற்றங் கரைகளில் பயிர் செய்பவர்கள் குரங்குகளினால் அதிகம் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் விவசாயிகளில் ஒரு பகுதியினர் யானை வேலியை அமைத்து வருவதாகவும் ஒருமுறை அந்த வேலியில் முட்டினால் குரங்கு மீண்டும் அந்த பகுதிக்கு வரத் தயங்கும் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த ஒரு அரசியல் செயற்பாட்டாளர் (அதேசமயம் விவசாயப் பாரம்பரியத்தில் வந்தவர்) சொன்னார், தங்களுடைய ஊரில் முன்பு குரங்குகளின் வாயை கட்டும் நுட்பம் தெரிந்த மாந்திரீகர்கள் இருந்ததாக. அவர்கள் மரங்களில் ஏறி எதையோ செய்வார்களாம். அதன் பின் குரங்குகள் அந்த மரங்களுக்கு வந்தாலும் காய்கறிகளில் வாய் வைப்பது இல்லை என்று அவர் சொன்னார். அது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியாத ஒரு நம்பிக்கை. ஆனால் காட்டோரமாக விவசாயம் செய்பவர்கள் சில சமயங்களில் குரங்குத் தொல்லை தாங்க முடியாத போது வேட்டைத் துவக்கினால் குரங்குகளைக் கொல்வதும் உண்டு. கொல்லப்பட்ட குரங்கின் உடலை அப்பகுதியில் தொங்கவிடுவார்கள். அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு குரங்கின் வருகையை தடுக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

விவசாயிகள் மட்டுமல்ல காட்டுக்கு அருகே இருக்கும் கிராமவாசிகளும் வீடுகளில் பயிர் பச்சை வைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாக முறையிடுகிறார்கள். குறிப்பாக வன்னிப் பெருநிலத்திலும் யாழ்ப்பாணம் தென்னராட்சியிலும் இந்த நிலைமை உண்டு.வீட்டில் ஆசையாக ஒரு பயிர் பச்சையை வைத்தால் குரங்கு அதை பிடுங்கிச் சாப்பிட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்கள். மாங்காய்களை மட்டுமல்ல மரவள்ளித் துளிர்கள் உட்பட பயன்தரும் மரங்களின் துளிர்களை எல்லாம் குரங்குகள் சாப்பிட்டு விடுவதாகவும் வன்னியில் முறைப்பாடு உண்டு.

இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை எல்லா அதிர்ச்சிகளின் போதும் தாங்கிப் பிடித்தது விவசாயம்தான். அந்த விவசாயத்துக்கு குரங்கு ஒரு எதிரியாக மாறியிருப்பதாக விவசாயிகள் முறைப்பாடு செய்கிறார்கள். அது தொடர்பாக புள்ளிவிபரங்களும் உண்டு. புள்ளிவிபரங்களால் இக்கட்டுரையை நிரப்பக் கூடாது என்பதனால் அதைத் தவிர்க்கிறேன்.

ஆனால் இலங்கை அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் குரங்கை ஒரு பீடை என்று அறிவிக்கும் அளவுக்கு குரங்குகள் விவசாயத்துக்கு பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டன. அண்மையில் அரசாங்கம் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்குகள் பட்டியலில் இருந்து குரங்குகளை நீக்கும் அளவுக்கு குரங்குகள் ஆபத்தானவர்களாக மாறிவிட்டன. இவ்வாறான ஒரு பின்னணியில் அண்மையில் அரசாங்கம் குரங்குகளைக் கொல்வதற்கு அனுமதி அளித்திருந்தது.

இவ்வாறு குரங்குகள் கொல்லப்படுவதை விடவும் சீனாவுக்கு அனுப்பினால் அதனால் காசும் கிடைக்கும். அதே நேரம் குரங்குகளுக்கும் ஒரு வாழ்வு கிடைக்கும். நாட்டில் இருந்து உயிர்களை வெளியே கொண்டு போவதற்கு இருக்கும் சட்டரீதியான தடைகளை அரசாங்கம் தளர்த்த வேண்டியிருக்கும்.

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து சீனா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என்றும், சீனத் தனியார் நிறுவனமொன்றே இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குரங்குகள் தொடர்பில் சீன மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக விவசாயத்துறை அமைச்சருக்கு சீன தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மிருகக்காட்சிசாலைகளுக்காக குரங்குகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை தொடர்பில் அவர் வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய தரப்பினரது பங்குபற்றலுடன் குழுவொன்றை நியமித்து ஆராய்ந்து வருவதாக அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். எந்தவொரு நாட்டுக்கும் விலங்குகளை சாதாரணமாக பரிமாற்றம் செய்ய முடியாது. எம்மைவிட மிகக்கடுமையான சட்ட ஏற்பாடுகள் சீனாவில் காணப்படுகின்றன. எனவே சில ஊடகங்களில் காண்பிக்கப்படுவதைப் போன்று, அரசாங்கம் தான் விரும்பியபடி விலங்குகளை இறைச்சிக்காக ஏனைய நாடுகளுக்கு வழங்க முடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஆனால் அது எந்த தனியார் நிறுவனம் என்பதை அமைச்சர் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் அதன்ருவிற்றர் பக்கத்தில் மேற்படி குரங்கு வியாபாரம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.. குரங்குகளை சீனாவுக்கு ஏற்றும் விடயம் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் செயலுக்குப் போகவில்லை. ஆனால் அது தொடர்பில் அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்து வருமளவுக்கு அதில் ஏதோ ஒரு உண்மை இருக்கிறது. குரங்குகள் சீனாவுக்கு விற்கப்படுமோ இல்லையோ குரங்குகள் நாட்டின் தலைப்புச் செய்திகளாகிவிட்டன. கடந்த வாரம் இலங்கைத் தீவில் அதிகம் மீம்ஸ் உருவாக்கப்பட்டது குரங்குகளுக்கு என்று கூறலாம்.

குரங்குகளைப் பிடிப்பதற்காக தூரத்திலிருந்து இயக்கக்கூடிய சிறப்பு வகைக் கூடுகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த கூடுகளைப் பயன்படுத்தி குரங்குகளைப் பிடிப்பதற்காக விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயிர்களை சேதப்படுத்தும் குரங்குகளை அகற்றும் பணிகளுக்கு அனைத்து விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு கூறியுள்ளது. வன விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் வகையில், அவற்றுக்கு உணவளிப்பதற்கு ஏதுவாக அனைத்து பயிர் நிலங்களிலும் அரை ஏக்கர் நிலத்தை ஒதுக்க வேண்டும் என விலங்கு நல அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து குரங்குகளை வாங்கச் சீனா தயாராகி வருவதாக தகவல் கிடைத்ததையடுத்து, அமெரிக்காவும் குரங்குகளைப் பெற விண்ணப்பித்துள்ளது. எவ்வாறாயினும், அமெரிக்காவிற்கு தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சீனாவுக்கு 100,000 குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதே பொருத்தமானது எனவும், விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டாம் என எவரும் கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் உள்ள குரங்கு ஒன்றை பிடிப்பதற்காக மாத்திரம் சுமார், 5 ஆயிரம் ரூபா வரையில் செலவிடுவதற்கு சீனா தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இலங்கையிலுள்ள குரங்கொன்றிற்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் சீன அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இலங்கை குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்தபோவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானது என்றும் அவர் கூறியுள்ளார். சீனா குரங்குகளை மிருகக்காட்சி சாலைகளில் பாதுகாப்பதற்கு என்றே கேட்டுள்ளதாக கூறும் அமைச்சர், இலங்கையிலுள்ள குரங்கொன்றை பிடிப்பதற்கும், அதனை சீனாவிற்குக் கொண்டு செல்வது வரையான அனைத்து செலவீனங்களையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதாவது, குரங்குகளைப் பிடித்து, தனிமைப்படுத்தி, அவற்றுக்கு நோய்த்தொற்று உண்டா என்பதனை பரிசோதித்து, கூடுகளில் அடைத்து, சீனாவிற்கு கொண்டு செல்வதற்கான முழுச்செலவையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபா செலவளித்து சீனாவிற்கு கொண்டு சென்று, அந்த குரங்கை இறைச்சிக்காக பயன்படுத்துவார்களாயின் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் வைத்து ஒரு லட்சம் ரூபாவிற்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிட்ட அமைச்சர், ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து குரங்கை வாங்கிச் சமைப்பதற்கு சீனர்கள் தயாராக இருக்க மாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்படலாம் என இலங்கை சுற்றாடல் நீதி அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே கூறுகிறார். இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகளை அழகுசாதனப் பொருட்களைச் சோதனை செய்வதற்கும் மருந்துவப் பரிசோதனைகளிற்கும் சீனா பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறுகிறார். மிருகக்காட்சி சாலைகளிற்கான சர்வதேச வரைவிலக்கணங்களின்படி, சீனாவில் 18 மிருகக்காட்சி சாலைகளே உள்ளன. ஒரு மிருகக்காட்சி சாலைக்கு 5,000 குரங்குகள் என்று கணக்கிட்டாலும் சீனா தெரிவிப்பது நம்பக்கூடிய விடயமாக இல்லை என்றும், இலங்கை அரசாங்கம் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்பினாலும் இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை குறையப்போவதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

சீனாவின் தனியார் நிறுவனமொன்று இலங்கைக் குரங்குகளை தனது மிருகக்காட்சி சாலைகளில் பேணப்போவதாகக் கூறுகிறது. அதேசமயம் சீனாவில் குரங்கு இறைச்சி சாப்பிடும் பாரம்பரியம் இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக குரங்கின் மூளையிலிருந்து தயாரிக்கப்படும் உணவு சீனாவில் அதிகம் விலை கூடியதாகவும் பெரும் செல்வந்தர்களால் மட்டும் நுகரப்படக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் குரங்குகள் சீனாவின் விலங்குகள் காப்பகத்துக்கு எடுத்துச் செல்லப்படுமா அல்லது சமையலறைக்கு எடுத்துச் செல்லப்படுமா என்ற சந்தேகத்தை ஒரு பகுதியினர் கிளப்புகிறார்கள்.

இலங்கைத் தீவு இதுவரையிலும் பணிப்பெண்களையும் வீட்டு உதவியாட்களையும் நாட்டுக்கு வெளியே அனுப்பி வருமானத்தைப் பெறுகின்றது. இப்பொழுது குரங்குகளையும் அனுப்பினால் என்ன? என்று சிந்திக்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறது. அரசாங்கம் உண்மையாகவே குரங்குகளை அனுப்புமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் ஐ.எம்.எ∴ப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்படிந்த அரசாங்கம் பொதுமக்களை வருத்தும்பொழுது கொதித்து எழும் சிங்கள மக்களைத் திசைதிருப்ப குரங்குகள் சில சமயம் அரசாங்கத்திற்கு உதவுமா? அதாவது அரசாங்கம் ஒரு குரங்காட்டியின் வேலையைச் செய்கின்றதா?

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் மத நிகழ்வுகளைத் தவிர காலி முகத்திடலில் இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது மே நாள் ஊர்வலங்களும் உட்பட எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் காலிமுகத்திடலை நோக்கி அதாவது தலைநகரில் தூதரகங்களின் பார்வைக்குள் வருவதைத் தடுக்கும் உள்நோக்கமுடையது. அதாவது ஆர்ப்பாட்டங்களையிட்டு அரசாங்கம் உசாராகக் காணப்படுகிறது. எனவே மக்களுடைய கவனத்தைத் திட்டமிட்டுக் குழப்பவேண்டும். அதற்கு குரங்குகள் உதவுமா?

நவீன ஊடகக் கலாச்சாரம் எனப்படுவது ஒரு வகையில் வாசகர்களையும் பார்வையாளர்களையும் குரங்கு நிலையில்தான் வைத்திருக்கின்றது. திட்டமிட்டு ஒரு ட்ரெண்டை செற் பண்ணுவதன்மூலம் ஒரு சமூகத்தின் கூட்டுக் கவனக்குவிப்பை அடிக்கடி மாத்தலாம். குரங்கு கொப்புக்கு கொப்பு தாவுவதைப் போல. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஐ.எம்.எ∴ப்பின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் போது, பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கோபத்தையும் விரக்தியையும் திசைதிருப்ப குரங்கும் அரசாங்கத்துக்கு உதவுமா?

## உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 11)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**

## அரங்கேறும் நரித்தனம்.... ஆடுவதற்கு ஒரு கூட்டம்....



இலங்கை நாட்டில் சாதாரண பொதுமக்களுக்கு நன்மையும் நிம்மதியும் தரக்கூடிய மாற்றங்கள் பற்றிய தகவல்கள் வந்து கொண்டிருக்குதோ இல்லையோ நம்மை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் தலைப்புச் செய்திகளுக்குப் பஞ்சமே இல்லை.

இலங்கைக் குரங்கு சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படப் போகுதாம் என்று வந்திருக்கிறது செய்தி. சீனாவுக்கு போற குரங்கு பெரும்பான்மை சிங்களக் குரங்கா அல்லது சிறுபான்மைத் தமிழ்க்குரங்கா என்று கேட்கிறது ஒரு பதிவு. சீனா கேட்ட ஒரு இலட்சம் குரங்குகளோடு பாராளுமன்றத்தில் அடிக்கடி பக்கம் தாவிக்கொண்டிருக்கும் 225 குரங்குகளையும் இலவசமாக சீனாவுக்கே அனுப்பி விடுங்கள் என்கிறது இன்னொரு அரசியல் கார்ட்டூன். குரங்கு மட்டுமல்ல விவசாயத்தை அழிக்கும் மயில்கள் மரஅணில்கள் காட்டுப்பன்றிகள் என்பவற்றையும் ஏற்றுமதி செய்து பணம் சம்பாதிக்கலாம் என சில அறிவுக் கொழுந்துகள் ஆசை காட்டி அறிக்கைகளையும் விடுக்கின்றன.

அது ஒருபுறமிருக்க பிந்திய செய்தியாக இப்போது காலி முகத்திடலில் சமய நிகழ்வுகளைத்தவிர வேறு எந்த நடவடிக்கைக்கும் அனுமதி இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிகளவு மக்கள் கூடுவதால் அங்குள்ள புற்றரைகள் பாதிக்கபடுவதாகவும் அதனை சீர்செய்ய அதிகளவு நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறுகிறது. உண்மையில் காலி முகத்திடல் என்பது டச்சுக்காரர்களின் ஆட்சியில் ஒரு கொலைக்களமாகப் பயன்படுத்தபட்டு வந்திருக்கிறது என்பது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கோட்டாவின் ஆட்சிக்காலத்தில் காலிமுகத்திடலின் ஒரு பகுதியில் மக்கள் தங்கள் குறைகளை வந்து கூற ஒதுக்கப்பட்டிருந்தது. பெரிய கதிரையில் இப்போது அமர்ந்துள்ளவர் அப்போது அரகலயகாரர் அங்கு போராட்டம் நடத்தத் தடையில்லை என்றும் வேண்டுமென்றால் அங்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்தித் தரலாம் என்றும் சுற்றுலாப்பயணிகளும் கூட அவற்றிலே பங்கேற்று அரசாங்கத்திற்கு எதிராகக் கோஷம் எழுப்பலாம் என்றும் வேடிக்கை காட்டினார். பதவிக்கு வந்தபின் இப்போது அந்த திசையைப்பார்த்தாலே அடித்துச் துவைத்துக்காயப் போடுகிறார். இவருக்கு முன்னர் இருந்த ஆமிக்கார ஆளே பரவாயில்லை என்று கூறுகிறார்கள் அடிபட்டுத் தெளிந்தவர்கள். ஒரு முக்கியமான பிரச்சினையில் குவிந்த கிடக்கும் மக்கள் கவனத்தை திசை திருப்ப வேண்டுமானால் மக்கள் பேசிக்கொண்டு திரியக் கூடிய வேறெரு பிரச்சினையை கொளுத்திப் போடவேண்டும். அது முடிய இன்னொரு கண்கவர் செய்தியைப் போட்டுத் தாக்க வேண்டும். ஒரு சினிமாப்படம் பார்க்கும் ரசிகனை கிளைமாக்ஸில் கதிரையின் நுனியில் உட்காரவைப்பதில் படத்தின் வெற்றி தங்கியிருப்பதைப் போல அரசியலிலும் வெற்றியும் நிலைத்திருத்தலும் ஒரு தலைவர் அல்லது கட்சி பற்றி அடிக்கடி காட்டப்படும் இமேஜின் அடிப்படையிலேயே தங்கியிருக்கும். இப்போது மீண்டும் தலைதூக்க ஆரம்பித்திருக்கும் புலிப்பூச்சாண்டி அதில் ஒரு வகை. என்னதான் குறைகள் இருந்தாலும் நாட்டை பயங்கரவாத்தில் இருந்து மீட்ட தலைவர்கள் அல்லவா என்று ஊடகங்களில் கொளுத்திப்போடப்படுவது இதனால் தான். அத்தோடு மகிந்தவோடு எதையும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்- இவரோடு பேச வாயைத்திறக்கவே முடியவில்லையே என்று பலர் அங்கலாய்ப்பதும் அடிக்கடி கேட்கிறது. அதேபோல இவர் ஆனானப்பட்ட அரகலயவையே விரட்டி விட்டார் பாருங்கள் என்று ஒரு தரப்பினர் சிலாகிக்கின்றனர்.

இவரது பொருளாதாரக் கொள்கைகள் பலன் தர ஆரம்பித்திருக்கின்றன என்று பொருளாதாரம் கற்றவர்களே பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஆளணியினர் அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக்கொள்கையை மாற்றியமைத்தல் உட்பட வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து சிலவாரங்களாக வேலை நிறுத்தம் செய்திருந்தனர். அவர்களின் தொழிற்சங்கங்கள் இலங்கை அதிபருடன் சந்திப்புக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு பதிலெதுவும் கூறாமல் இலங்கைப்பல்கலைக்கழங்களில் பொருளியல் கற்பிக்கும் விரிவுரையாளர்களை சந்தித்து சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டம் குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்கவேண்டும் என்று ஒரு கூட்டத்திற்கு அழைப்ப விடுக்கப்பட்டது. விரிவுரையாளர்களின் தொழிற்சங்கம் கூட்டத்திற்குச் செல்ல வேண்டாம் என்று கூறியது ஆனால் சுமார் முப்பது பேர்வரையில் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் அதில் பெரும்பாலானவர்கள் வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் பொருளியல் கற்பிக்கும் தமிழ்மொமி பேசும் விரிவரையாளர்கள் எனவும் அறியக் கிடைத்தது. “பேசுவோம் வாங்கோ” என்று அழைத்தவர் தனிச்சிங்களத்தில் கூட்டத்தை நடத்தி தமிழ்மொழி மூல விரிவுரையாளர்களுக்கு சிறப்பான கவனிப்பச் செய்திருக்கிறார்.

நெடுந்தூரம் மணித்தியாலக்கணக்கில் பல்கலைக்கழக வண்டிகளில் பயணித்து கூட்டத்தில் ஆர்வத்தடன் கலந்து கொண்ட தமிழ்மொழி மூல விரிவுரையாளர்களில் சிங்களம் தெரிநதவர்கள் ஓரளவு தலையை ஆட்டியிருப்பார்கள் மற்றவர்கள் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரி பேந்தப் பேந்த விழித்திருந்தவிட்டு வந்திருப்பார்கள். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் இது ஒரு புலமைச் சமூகத்தை அவர்கள் சார்ந்த தொழிற்சங்கத்திலிருந்து பிரித்தாளும் தந்திரம் மட்டுமல்லாமல் பன்றியின் இறைச்சியை பன்றியின் மீதே வைத்து வெட்டுவது போல தன்னையும் தனது கொள்கை நடவடிக்கைகளையும் விமர்சித்தவர்களின் வாயிலேயே தனக்குப் பாராட்டுப்பத்திரம் வாசித்துக்கொண்ட ஒரு நடவடிக்கையாகவும் அமைந்தது.

நான் தொழில் புரியும் பல்கலைக்கழகத்திலே எனது துறையிலேயே வேலை செய்யும் இரண்டு பேர் அங்கு சென்று ராசாவே உன்னை விட்டால் மீட்பர் யாருமில்லை உனது கொள்கைகளை விட்டால் இந்த நாட்டிக்கு மீட்சியில்லை என்று துதி பாடினார்கள். அவர்களில் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் வரை தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலே அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து வந்தவர். இப்போது முற்றாகத் எதிர்த்திசையிலே திரும்பியிருக்கிறார். சோழியன் குடுமி சும்மா ஆடுமோ? அவர்களது புகழ்ச்சிக்கான பிரதிபலன்கள் விரைவில் உயர்பதவிகளாகவோ வேறுவழிகளிலோ அவர்களுக்குக் கிடைக்கும்.

அது சரி எள் எண்ணெக்குக் காய்ந்தது எலிப்பிழுக்கை எதற்காகக் காய்ந்தது?

அண்மையில் எனது துறையில் நடந்த ஒரு ஒன்று கூடலில் அந்தக் கூட்டத்திற்குச் சென்ற பேசிய மேற்படி இருவரையும் சந்தித்தேன். அந்தக் கூட்டத்தைத் தனிச்சிங்களத்தில் நடத்தியது தவறு என்று வம்புக் கதை விட்டார்கள். நோ கொமென்ட்ஸ் என்று வெட்டிவிட்டேன். அங்கே புகழ்மாலை சூட்டிவிட்டு இங்கே வந்து விமர்சிக்கும் பச்சோந்திகளுடன் கதைத்து என்ன பயன்? பொருளாதார நெருக்கடி விலையதிகரிப்பு மற்றும் நெருப்பு வீத வரிக்கொள்கையால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய போராட்டங்கள் எல்லாம் பழைய செய்திகளாக மாறிவிட்டன. இலங்கையில் எந்தெந்தச் தொழிற் சங்கங்கள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்துமோ அவை பணிபுரியும் அரச நிறுவனங்கள் வழங்கும் பொருள்களும், சேவைகளும் அத்தியாவசிய தேவைகளாக வர்த்தமானியில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் பெற்றோலிய தொழிற்சங்கங்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் இராணுவத்தைக் கொண்டு அடக்கப்பட்டமையும் அதில் ஈடுபட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளமையும் விசாரணை முடிவில் அவர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படும் சாத்தியங்களும் ஒரு தெளிவான செய்தியினைக் கூறுகின்றன.

அது மட்டுமல்லாமல் புதிதாக ஒரு பயங்கரவாதத் தடைச்சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படுமானால் பதவியிலிருக்கும் அரசாங்கத்தை விமர்சிக்கும் எவரையும் பயங்கரவாதிகளாகக் கருதி நடவடிக்கை எடுக்கலாம். சொல்லப்போனால் இலங்கை இப்போதுள்ளதைவிடவும் சர்வ அதிகாரங்களும் ஓரிடத்திலே குவிந்த ஒரு எதேச்சதிகார இராச்சியத்தை நோக்கி நகர்வதற்கான எல்லாச் சமிக்ஞைகளும் ஒருங்கே தென்படுகின்றன.

அதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளால் இலங்கையின் பொருளாதாரம் சீர்செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வரிசையில் நிற்கின்றனர் என்ற தொனியில் மிகப்பலமான ஒரு சமூக ஊடகப் பிரசாரம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது. வறுமை என்றால் என்ன என்று தெரியாத கூட்டத்தை இப்பிரசாரம் வெகுவாகக் கவரக் கூடும். ஆனால் வறுமை நிலையில் உழல்பவர்கள் தமது நாளாந்த வாழ்க்கை நெருக்கடியில் உள்ள போது இத்தகைய பிரசாரங்களை நம்புவது கடினம் என்கிறார் முன்னைநாள் ராஜதந்திரி ஒருவர்.

இப்போது மீண்டும் தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய செய்திகள் வரத் தொடங்கியுள்ளன. அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான கொள்கைப் பொதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் தேசிய அரசாங்கம் பற்றிய செய்திகள் அதனை மேவிச் செல்லும் வகையில் பிரபலப்படுத்தப்படலாம்.

பொருளாதார நெருக்கடிகளை விக்கிரமசிங்க லாவகமாகக் கையாண்டிருக்கிறார். அரகலய காலத்தில் காணப்பட்ட நெருக்கடிகள் இப்போது இல்லை பற்றாக்குறைகள் நீங்கிவிட்டன. பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. விலை மட்டங்கள் குறைவடைந்து வருகின்றன.

என்று பாராட்டுப்பத்திரம் வாசிக்கபடுகிறது. கடந்த பண்டிகைக் காலத்தில் மக்கள் பெருமளவில் வெளியே வந்து பாரியளவு பொருட் கொள்வனவில் ஈடுபட்டமை மக்களிடம் செலவிடக் கூடிய வல்லமை உள்ளது என்பதைக் காட்டுவதாகவும், இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவருவதற்கான ஒரு சமிக்ஞையாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த பதினாறு தடவைகளிலும் பெற்ற நிதியை விடவும் கூடிய 2.9 பில்லியன் பெறுமதியான பொதியினை சர்வதேச நாணய நிதியிடமிருந்த ஜனாதிபதி பெற்றுவிட்டார் என்று அவரது சாதனையாகக் காட்ட மேட்டுக் குடியினர் முயற்சித்து வருகின்றனர்.

**(தொடர்ச்சி 10 பக்கம்)**








(7 பக்கத் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

மேல் மாடி அறையில் இருந்த எமக்கு மாடிப்படி வழியாக கீழே இழுத்து செல்லப்பட்ட பொன்சேகாவின் கூக்குரல் நீண்ட நேரம் கேட்டது.

இன்றுபோல் ஞாபகம் இருக்கிறது. இழுத்து செல்லப்படும் பொழுது பொன்சேகா தலையை திருப்பி எம்மை பார்த்தார்.

ஒரு வினாடி அவர் கண்களும், என் கண்களும் சந்தித்தன. அவரது கண்களில் தெரிந்தது, கோபமா, துக்கமா, அவமானமா என்பதில், "அவமானம்" என்பதற்குத்தான் எனது "ஓட்டு".

அந்நேர அரசியல் சூழலில் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத கடத்தல், காணாமல் போதல், படுகொலை, ஆகியவற்றுக்கு எதிராக போராடிய முன்னணி போராளி, நான்.

இதனால், தென்னிலங்கை இனவாதிகள் என் மீது "புலி" என்ற முத்திரையை குத்தி இருந்தனர்.

அப்படியானால் இங்கு என்ன நடக்கிறது?

புலிகளின் தலைவர் பிரபாகரனை தோல்வியடையச் செய்து, கொன்று, விடுதலை புலிகளை நிர்மூலமாக்கி, நேற்று முன்தினம் வரை முழு நாட்டு சிங்கள மக்களாலும் தேசிய வீரன் என தோளில் சுமக்கப்பட்டு, உலகத்திலேயே மிக சிறந்த இராணுவ தளபதி என ராஜபக்ச சகோதரர்களாலே புகழப்பட்ட, போர் தளபதி பொன்சேகாவை, அவர் தலைமை தாங்கிய அதே ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள், மிருகத்தை போல அடித்து இழுத்து சென்றனர்.

காலம் இங்கே நிகழ்த்தி காட்டிய விசித்திரம் என்னவென்றால், இவர்களாலேயே "தமிழ் புலி" என்று பொய் குற்றஞ்சாட்டப்பட்ட என் கண்களின் எதிரிலேயே, அதே புலிகளை துவம்சம் செய்த "சிங்கள" ராணுவ தளபதி பொன்சேகா இழுத்து செல்லப்படறார்.

எனக்கு தோன்றிய இந்த எண்ணம், பொன்சேகாவிற்கு தோன்றியதோ தெரியலை.

தோன்றினாலும், தோன்றாவிட்டாலும் கூட போர் வெறியர்கள் இதையிட்டு வெட்கப்படத்தான் வேண்டும்.

அரசியல் வெஞ்சினம், பழி வாங்கும் உணர்வு காரணமாக, "உலகிலேயே மிக சிறந்த ராணுவ தளபதி" என்று சொன்ன வாயாலேயே "அவனை அடித்து இழுத்து வா" என்று சொல்லிச் செய்தார்கள்.

இவர்கள் கூறும், "தேசபக்தி, சிங்கள பௌத்த நாடு, மொழி, இனம், மதம், மகாவம்ச சரித்திரம்..." இதெல்லாம் இவர்களுக்கு முக்கியமல்ல. தமது தனிப்பட்ட அரசியல் இலக்குகளை அடைய இவற்றை இவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பது மட்டுமே உண்மை.

அன்று, எனக்கு பொன்சேகா மீது அனுதாபம்தான் ஏற்பட்டது.

நான் புலி அல்லவே..! புலிகள் கூட, இப்படி ஒரு வீரனுக்கு நிகழ்த்தப்படும் அவமானத்தை கண்டு சந்தோசப்பட்டிருக்க மாட்டார்கள்.

நிறைய சிங்கள நண்பர்களும் இப்படி நினைத்து என்னிடம் கூறியுள்ளார்கள்.

போரில் பிரபாகரன் வெற்றி பெற்றிருந்தால்கூட இப்படி செய்திருக்க மாட்டார் என நான் நம்புகிறேன்..! இப்படி நான் சொல்வதை பார்த்து சில புலி எதிர்பாளர்கள் என்னை திட்டலாம். நேர்பட பேசி, நான் வாங்காத திட்டா..? அட போங்கடா..!

மானவடு குழுவினர் பொன்சேகாவை கைது செய்ய எமது அறைக்கு வருமுன் கீழ் தளத்தில் இருந்த எனதும், ஹக்கீமினதும் காவல் அதிகாரிகளை தற்காலிகமாக கைது செய்து, அவர்களின் ஆயுதங்கள், கைபேசிகளை கைப்பற்றி, ராணுவ பாதுகாப்பில் விட்டுதான், மேலே வந்தனர் என நான் பின்னர் அறிந்தேன்.

அன்று, அவ்விடத்தில் துப்பாக்கி, ஆயுதங்கள் பெருமளவில் இருந்தபோதும், ஒரு வெடிப்பும் நிகழவில்லை.

(இந்த மானவடு ஓய்வின் பின் தன் வீட்டில் தோட்ட வேலை செய்யும்போது, தலையில் பூச்சாடியோ, ஏதோ விழுந்து, அகாலமாக இறந்து போனார் என பின்னாளில் அறிந்தேன்..!)

## வீணாவின் கவிக்கணை

ஒவ்வொரு விடியலுமே
உனக்கு
ஒவ்வொரு பிறப்பு,,
நிச்சயமில்லா வாழ்க்கை,
கோபுரத்தின் உச்சியில்
வைத்து வாழவும்விடும்,
மரண அடி கொடுத்து
வீழ்த்தியும் விடும்,
எதையும் தாங்கும்
சக்தி உன் இதயத்திற்க்கு
இருந்தால் போதும்,
இந்த உலகில் வாழும்
தகுதியடைந்து விடுவாய் மனிதா.

(9 பக்கத் தொடர்ச்சி)

# விநாயகர் விமர்சனம்

பொருளியல் பேசவல்ல சிலரும் மேட்டுக் குடி வர்த்தக சமூகத்தில் உள்ள சிலரும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளால் நாடு விரைவில் நெருக்கடிகளில் இருந்து மீண்டுவரும் என்று ஊடகப்பிரசாரம் செய்கின்றனர். 2048ஆம் ஆண்டில் இலங்கை ஒரு அபிவிருத்தியடைந்த நாடாக மாறிவிடும் எனவும் நாட்டுக்குத் தேவை சரியான பொருளாதாரக் கொள்கையே தவிர பிரபல்யம் வாய்ந்த பொருளாதாரக் கொள்கைகள் அல்ல தான் சரியானதையே செய்ய விரும்பவதாகவம் பிரபலமான கொள்கைகளையல்ல என்கிறார் இலங்கை அதிபர். இலங்கை நாட்டின் பிரதமராகப் பல தடவைகள் பதவி வகித்த அவர் ஏன் சரியானதாக அவர் கருதும் பொருளாதாரக் கொள்கைகளை முன்பு அறிமகப்படுத்தவில்லை? யாராவது அதை தடை செய்தார்களா? இப்போது தான் புதிய ஞானோதயம் பிறந்திருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால் வேலையைச் செய்து முடிக்க அவரைவிட்டால் ஆளில்லை என்றே பிரசாரம் வலுப்பெறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்த உடனேயே அரசாங்கம் பெற்றோலியப் பொருள்களின் விலைகளைக் குறைத்தது. அதன்மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் பொதி பொதுமக்களுக்கு நேரடி நன்மைகளைத்தரும் என உணர்த்தப்பட்டது அதனைத் தொடர்ந்து மரக்கறிகள் உள்ளிட்ட உணவுப்பொருள்களின் விலைகளும் சந்தையில் குறைவடைந்தன. ஆனால் சர்வதேச நிதியத்துடன் இணங்கிக்கொள்ளபட்ட கடன் மீள்செலுத்தல் பற்றிய பேச்சுவார்த்தைகள் இனிமேல்தான் நடத்தப்படப் போகின்றன. ஆகவே மிகக்கடினமாக வேலைகள் இனிமேல் தான் நடைபெற உள்ளன ஆகவே அரசாங்கம் வாழைமரத்தில் கொத்திய மரங்கொத்தியாக அதில் சிக்கிக் கொள்ளும் வரையில் தேர்தல்கள் வேண்டும் என்று கத்தாமல் அடக்கி வாசிக்கலாம் என எதிர்க்கட்சிகள் இருப்பதாக ஒரு ஹேஸ்யம் நிலவகிறது. ஸ்ரீமான் பொதுஜனத்தின் பார்வையில் தற்போதைய இலங்கை அதிபர் சிங்கப்பூரின் லீக்குவான் போலச் செயற்பட விரும்புவதாகத் தெரிகிறது. ஆனால் அதற்குத் தேவையான மக்கள் ஆணை அவருக்கு இல்லை என்பது தான் கசப்பான கள யதார்த்தம்.

# Bill C-18 Crucial For Ethnic Media and Canadian Society. By Senator Peter Harder (Ontario)

Ethnic media outlets have traditionally played a crucial role in helping newcomers navigate life in their newly adopted home. Rarely, though, have they been as invaluable as they were during the Covid pandemic.

During its earliest and perhaps most alarming phase, federal officials grappled with how best to convey information to newcomers on protecting themselves from the virus. Many immigrants and refugees speak neither English nor French, while others hold a general distrust of government based on their experiences in their country of origin. Moreover, a large proportion of the individuals whose job it is to help vulnerable Canadians – personal service workers – are newcomers themselves.

The challenge was particularly acute given the financial difficulties facing so many outlets being counted on to disseminate information about hygiene and vaccine hesitancy. Advertising revenue during the pandemic plummeted, printing costs went way up, job losses accelerated, and a number of outlets faced potential closure. At least one publisher took out a personal loan to stay afloat.

At the end of the day, the vast majority of ethnic media kept operating, communicating information that no-doubt saved countless lives. The federal government also played a role in providing financial aid.

The story of ethnic media's role during the pandemic is instrumental in demonstrating why Canada so badly needs minority language outlets to thrive. If we're to reach our goals as a welcoming, innovative and productive nation, newcomers need to have access to information about Canadian mores, values and democratic systems.

Unfortunately, the challenges currently facing Canada's minority language media are the same as those facing other Canadian outlets. Ad revenues are plummeting and eyeballs are being drawn away by big tech platforms who post content produced by those outlets, often without paying for it

This erosion is a big reason why I am sponsoring Bill C-18, the Online News Act, in Canada's Senate. This legislation would compel big tech companies, like Google and Meta, to start paying their fair share for content produced by outlets like the one you're reading today.

Without this bill, a number of ethnic media outlets will face potential bankruptcy and newcomers relying on them for information about their new country will have a harder time adjusting. According to a recent U.S. Department of Justice civil antitrust suit, "as a result of its illegal monopoly, and by its own estimates, Google pockets on average more than 30 per cent of the advertising dollars that flow through its digital advertising technology products."

Opponents of the bill will argue that the big companies are already doing deals with some of the major players in Canadian media, which makes the bill superfluous.

Unfortunately, much of Canada's ethnic media has been left out of these agreements, according to Maria Saras-Voutsinas, executive director of the National Ethnic Press and Media Council. Big Tech platforms should not be allowed to pick and choose the outlets they want to deal with. If they're going to pay for content produced by big media companies, they should also do so for others.

Other opponents also argue that the market should decide the fate of these outlets and let the chips fall where they may.

But, as proven during the pandemic, many of these outlets provide a very specific public service along with their private sector role. And, while I do believe that the market must ultimately reflect the desires of consumers, outlets need time to adjust to the new environment.

One of the more overarching reasons for the bill, of course, is that ethnic news outlets are indispensable to educating newcomers about democracy – a system that is being undermined in so many parts of the world, including in many of the nations which were once home to new Canadians.

Ms. Saras-Voutsinas notes that the availability of Canadian news has made a world of difference to her own community. Reading about Canadian current events in their first language has allowed many Greek-Canadians to feel invested in their new country and, because of that, they have taken courses to learn French and/or English, often leading to citizenship.

"This is what the news can do: It can take people out of isolation and better-explain their neighbours, their province and their country, and that is good for democracy," she told a House of Commons Committee examining the bill.

Over the next several weeks, Canada's senators will spend a good chunk of time examining C-18. Not all senators approve of the bill in its current form and will offer criticisms. Some may try to make amendments. Comprehensive debates and sober second thought are what the Senate was made for.

That said, this bill must pass before we rise for the summer, allowing for negotiations with Big Tech companies to begin sooner rather than later. Otherwise, it's possible that financially strapped outlets will fail to survive.

Strong, free and fiercely independent ethnic media outlets are the backbone of Canada's rich cultural mosaic, and they play a key role in building social cohesion and strengthening our democracy. C-18 will help ensure that they are commercially viable and can continue to give underrepresented communities a strong voice for years to come.

Senator Peter Harder is the Senate sponsor of C-18 and the former Government Representative in the Senate.

# தமிழ் மக்களின் பிரச்சனைக்கான போராட்டத்தில் பங்குபெற போவதில்லை என "சைக்கிள் கட்சி" அறிவிப்பு

- எமது யாழ் செய்தியாளர்




இலங்கையில் தமிழர் தாயகப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும் நில அபகரிப்பு, இராணுவமமயமாக்கல், வலிந்த சிங்கள குடியேற்றம், கோவில்கள் இடித்தழிப்பு போன்ற பல பிரச்சனைகள் தொடர்பில் இம்மாதம் 25ஆம் திகதி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை) நடைபெறவுள்ள போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கு பெறாது என்று அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வியாழனன்று தெரிவித்தார்.

தமிழ் மக்களின் மீதான நில, தொல்லியல் ஆக்கிரமிப்பு, மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது உட்பட தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வடக்கு கிழக்கு தழுவிய போராட்டத்தின் முதற்கட்டம் யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை நடைபெறும் என்று எதிர்ப்பர்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலே தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி ஏழு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் 22க்கு மேற்பட்ட மத, சமூக மற்றும் தொழிற்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றிருந்தது. அந்தக் கூட்டத்தில், தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும் வகையில் கலாசார பண்பாட்டு மற்றும் சமூக விழுமியங்களை சிதைத்து, இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியும் அங்கு பௌத்த சின்னங்களை நிறுவியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலை ஆகியவற்றை எதிர்த்து வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கும் இவ்வேளையில் அதனுடைய கடுமையான எதிர் விளைவுகளை கவனத்தில் கொண்டு அந்தச்சட்ட வரைவை எதிர்த்தும் அதை நிறைவேறாமல் தடுப்பதற்கும் தமிழ் பேசும் மக்களினுடைய ஏனைய பிரதிநிதிகளோடு கலந்துரையாடல் நடத்தி ஒன்றிணைந்த எதிர்ப்பு போராட்டத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக போராட்டம் தொடர்பான ஏற்பாட்டுக்குழுவினர் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். அந்த கட்சிகள் மற்றும் இதர அமைப்புகள் முன்னெடுக்கும் எந்த போராட்டத்திலும் பங்குபெற போவதில்லை என்று கூறியுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதற்கான தமது கட்சியின் காரணங்களையும் முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எதிர்வரும் 25ஆம் திகதி இதர கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் முழு அடைப்பு (ஹர்த்தால்) ஒன்றிற்கான அழைப்பை விடுத்துள்ளது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே தமது கட்சியின் நிலைப்பாட்டை அவர் தெரிவித்தார்.

ஹர்த்தாலானது தங்களுடன் சமபந்தப்பட்ட விடயம் அல்ல என்றும் மாறாக குறித்த தமிழ்த் தரப்புகள் புதுப்புது அமைப்புக்களை உருவாக்குவதற்கு முன்னரே இவற்றுக்கெதிராக போராடிக்கொண்டிருக்கும் அமைப்பு தாம் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களை எதிர்க்க வேண்டுமென்றால் வேறு எவருடைய உதவியையும் தேடாமல், மக்களிடம் இவற்றை கொண்டு செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

“தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைப்பை உருவாக்கிக் கொள்பவர்கள், இந்த பிரச்சனைக்கு அடிப்டையான ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை, உட்பட 13ம் திருத்தச்சட்டத்தை தொடர்ந்தும் ஆதரிக்கிறார்கள்” என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

“ஒருபுறம் அமைப்புகளை உருவாக்கி போராடுகின்றோம் என மக்களை ஏமாற்றுபவர்கள், மறுபுறம் இவை அனைத்தையும் மேற்கொள்ள ஒற்றையாட்சிக்குளிருக்கும் 13ம் திருத்தச்சட்டத்தை எதிர்க்க முதுகெலும்பற்றவர்களாக காணப்படுகிறார்கள்” என்று இந்த ஹர்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள கட்சிகள் மற்றும் அமைப்புகளிற்கு காட்டமாக பதில் வழங்கியுள்ளார்.

எனவே இவ்வாறான தரப்புகளுடன் இணைவதானது, “மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாடாகும்” என்றும் மாறாக மக்களுக்கு இந்த நடவடிக்கைகளை எதிர்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதர கட்சிகளை கடுமையக விமர்சனம் செய்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி தமிழ் மக்களிடம் எந்தளவிற்கு செல்வாக்கு உள்ளது என்று தமிழ் மக்கள் வினவுகின்றனர். யாழ்ப்பாணம் நகர் அல்லது யாழ் தேர்தல் மாவட்டத்திற்கு வெளியே இவர்களிற்கு எந்தளவிற்கு மக்களின் ஆதரவு உள்ளது என்பது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தெரிந்தது என்று அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் மக்களின் நலன் மற்றும் யதார்த்தங்கள் ஆகியவற்றிற்கு மாறக சுயநல அரசியலில் ஈடுபடுகிறார் என்று தமிழ் அரசியல் விடயங்களை தொடர்ச்சியாக அவதானித்து அது பற்றி எழுதிவரும் அரசியல் ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார். பொது விடயங்கள் அல்லது மக்கள் நலன் சார்ந்த போராட்டங்களின் போது “தனி ஆவர்த்தனம்” வாசிப்பது தமிழ் மக்களிடையே ஒரு கசப்பான உணர்வை ஏற்படுத்தும் என்றும், அது அடுத்துவரக் கூடிய தேர்தல்களில் பிரதிபலிக்கும் என்றும் அவர் கூறுகிறார்.



# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு:
**16 - 03 - 1938**

இறப்பு:
**24 - 03 - 2023**

# திருமதி. திருச்செல்வம் நாகேஸ்வரி

(ஆசிரியர் - புளியங்கூடல் ஆரம்பப் பாடசாலை)

யாழ். ஊர்காவற்துறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கனடா மிசிசாகா நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் நாகேஸ்வரி அவர்கள் 24-03-2023 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த செய்தியை அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும், எம் இல்லங்களுக்கு வருகை தந்து ஆறுதல் வார்த்தைகளை பகிர்ந்து சென்றவர்களுக்கும், பின்னர் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையங்களை அனுப்பிவைத்தவர்களுக்கும், உணவு மற்றும் உபசாரங்களை செய்தவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது குடும்பங்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் அனைவரும் எங்கள் வாழ்வில் உயர அப்பாவிற்கு அருகில்
நின்று எம்மை அணைத்து வளர்த்த அன்னையை பிரிந்த துயர்
இன்னும் ஆறவில்லை. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
இழப்பு ஈடு செய்ய இயலாத ஒன்றாகவே இருக்கப்போகின்றது அம்மா!
கற்ற கல்வியோடு நற்பண்புகளை ஊட்டி வளர்த்து எம்மை உயர வைத்து
பாரினில் பரந்து புகழொடு வாழ வழி சமைத்த அம்மாவே
நீங்கள் எம்மோடு இல்லாது மறைந்த நாட்தொடக்கம்
வெறுமையை உணருகின்றோம். வெந்து வாடுகின்றோம் ஒருபோது
பிரியாத ஒரு உள்ளத்தை இழந்தது எம்வாழ்வில் பெரியதோர் இடியென அதிர்ந்தோம் அம்மா...

எங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய அப்பாவிற்குத் துணையாகவும் எம்மிடத்தில் அன்பையும் ஆதரவையும் அள்ளித் தந்த அன்னையே! உங்கள் ஆத்மா இறைவனின் திருவடிகளைச் சென்றடைய புளியங்கூடல் மகாமாரி அம்பிகை அருள்புரிய வேண்டுகின்றோம்.

மேலும் எமது அன்புக்குரியவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் எதிர்வரும் 23-04-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. தொடர்ந்து 07-05-2023 அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.00 மணி தொடக்கம் 733 Birchmount Road, Scarborough, ON M1K 1R5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள எமது அன்புக்குரியவரின் நினைவஞ்சலிப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்கெடுத்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.!

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| ஈசன் - மகன்: | (416) 996-8542 | புஸ்பா - மகள்: | (647) 667-0479 |
| ரஜனி - மகள்: | (416) 833-8963 | நளினி - மகள்: | (416) 738-9198 |
| கலா - மகள்: | (289) 380-1526 | சியாமலா - மகள்: | (647) 773-9996 |


SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity lind of Credit
Pre-approvals
Self-employed
Multi-rental properties
New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

# South African Minister condemned second time for Inviting 'war crimes linked' Sri Lanka Ministers

- Siva Prameswaran



A leading rights group in South Africa has strongly condemned their Minister for International Relations and Cooperation (Dirco) for inviting two Sri Lankan ministers for their links with two former presidents who are accused of war crimes and crimes against humanity and have called upon the minister to offer an unreserved apology to the minorities in Sri Lanka.

The Solidarity Group for Peace and Justice (SGPJ) in Sri Lanka has decried the invitation by their Minister of Dirco Ms. Naledi Pandor. She had extended an invitation to Ali Sabry, Minister of Foreign Affairs, and Wijeyedasa Rajapaksa, Minister of Justice, Prison Affairs and Constitutional Reforms to assist Sri Lanka develop a Truth and Reconciliation Commission (TRC) model.

SGPJ has said both the ministers from Sri Lanka are close allies of former presidents Mahinda Rajapaksa and Gotabaya Rajapaksa. The rights body also says the TRC model as envisaged by the Sri Lankan government is an attempt to whitewash the alleged crimes and it is an assumption by both nations the model would work in Sri Lanka as in South Africa.

"A TRC model where the perpetrator oversees setting up the commission is preposterous" SGPJ has warned.

While the Tamil, Muslim and Christian people have been oppressed for decades, the attempt by Sri Lanka to establish a TRC model is to hoodwink the international community SGPJ observes. It also warns that "if any TRC model is applied, it will enable Sri Lanka to continue its gross human rights violations with impunity".

Sri Lanka's rush to apply a TRC model to resolve the decades-long ethnic crisis is another ruse to elude the international community, especially when the forthcoming UNHRC sessions are reaching a crucial state regarding the recommendation for war crimes, crimes against humanity, and genocide of Tamils during the final phase of the war-SGPJ has pointed out.

Mahinda Rajapaksa and Gotabaya Rajapaksa along with former Chief of Army Field Marshal Sarat Fonseka and the present Chief of Defence Staff Gen. Shavendra Silva, defense secretary Gen. Kamal Gunaratna and many other former and present tri-services officers are accused of committing war crimes.

The international community has expressed its deep disappointment over the culture of impunity prevailing in Sri Lanka, which is an impediment to reconciliation and rendering justice to the war-affected Tamils.

Even after 14 years since the bloody civil war came to a brutal end with the killings of thousands of Tamils trapped in a small strip of coastal land. Dubbed 'A war without witness' ended with at least 40,000 people dead according to the UN and thousands of others maimed and disabled permanently. Apart from that the fate of thousands of others who crossed over to the 'government-controlled area' or handed over, or surrendered to the armed forces was never seen or heard about after that.

In what is considered to be one of the longest peaceful protests in the world continuing over 2500 days, led by women, are still searching for their kith and kin handed over to the forces. A 'sham office' called the Office for Missing Persons formed by an Act of the Parliament in 2016 during the 'Yahapalana Government' is yet to trace a single individual who went missing or handed over to the armed forces.

Human Rights organizations, campaign groups, and international bodies including the UN have expressed their anguish and disappointment with the government of Sri Lanka towards their pseudo commitments given from time to time only to be negated subsequently.

Now the SGPJ too has pointed out this culture of impunity.

"If any TRC model is applied, it will enable Sri Lanka to continue its gross human rights violations with impunity".

The South African ambassador to Colombo to has come in for flak from the rights group. According to SGPJ, they have interacted with Sandile Schalk their High Commissioner in Sri Lanka for the past one year and "he agreed with the SGPJ that a TRC model was not applicable in the case of Sri Lanka".

Now they say their ambassador has suddenly done a U-Turn and it's baffling.

A couple of reasons have been cited by them why the model was not applicable to the island nation. The first among them is that the majority of Sinhala people have not accepted their wrongdoing and the second one is the continued infliction of oppression on the Tamil, Muslim, and Christian people. And, most importantly they say is the high military concentration in oppressed homelands.

Commenting further the SGPJ says the Sri Lanka government is clearly under huge pressure from the IMF and foreign investors to resolve the decades-old ethnic conflict and the present visit under the guise of seeking to discuss a TRC is a hoax to merely hoodwink the international community. The SL government is also accused of gaining some leverage before the UNHRC delivers its final report on the failed resolutions sponsored by the country itself.

While claiming that they have worked closely with Dirco for more than a decade along with the diaspora and other stakeholders in South Africa for over a decade, they accuse Minister Pandor of what they call 'her misguided intentions' and have demanded an unreserved apology to the marginalized Tamils, Muslims, and Christians in Sri Lanka.

# No Lands for Locals but 700 Acres to China as Part of a Debt Settlement

- Siva Prameswaran

War-affected Tamil in northern Sri Lanka fears their traditional homelands will soon become a Chinese colony after a government proposal to give away more than 700 acres of land to China as part of its debt settlement.

Colombo is said to have offered vast tracts of land in the impoverished districts of Killinochi, Mullaitivu, and Jaffna to China. While thousands of families who were still suffering the trauma of the war and its aftermath struggle to get a small parcel of land, a huge area of land is being given to China locals say in anguish.



"In the Northern Province, more than 15,000 families are living without any piece of land for themselves. The government never came forward to allot lands to the war-affected people in the province, but the action to allot vast lands to China creates a strong suspicion in us" Karuppiah Jeyakumar President of the Federation of village development societies in Karachi & village women development associations in Pradeshya Sabha area told local journalists.

The identified forest area allegedly planned to hand over to China is fertile land and serves as a means of livelihood for thousands of Tamils. They fear once the process of transferring the land to the Chinese takes effect they would become aliens in their own traditional homeland. Locals say while they are trying to get back to their normal lives after more than a decade of postwar trauma amidst the nonreturn of their lands due to constant threat and intimidation, the proposal has come as an irreversible shock for them.

The Tamils who don't have land or who have lost their lands due to forced occupation and continuous relocation for fear of safety during the war say they are 'living like nomads' even today.

Jaffna district Tamil National Alliance MP Sivagnanam Siritharan says handing over the land to the Chinese is part of a large plan of the Sri Lankan government with sinister intentions. He alleges that plans were initiated more than a decade back to alter the demography in the North and in particular in and around the area now planned to hand over to China.

"Iranaimadu tank acts as the boundary between Mullaitivu and Killinochi districts. During war times and in the post-war period the Sri Lankan government - as part of its long-term plan - took forward to make the area south of the tank a Sinhala area or colonize it through Sinhala people. In 2011 when Basil Rajapaksa visited Mankulam he made an announcement that in the next 25 years, it would be developed into a city with a population of 500,000 people".

The 500 acres now planned to be allocated are to the south of the Iranaimadu tank which is one of the most vital sources of water to the poverty-stricken Tamils of the Northern Province. As per the plan devised by the Rajapakshas thousands of houses were built with the intention of relocating the Sinhala people.

When those houses were not used for the planned Sinhala people resettlement they brought in a scheme for relocating the military personnel there. Most of such constructed houses are unfit for use now according to the locals. In such a situation TNA MP Siritharan says he has information from reliable sources that the Sri Lankan government is planning full efforts to hand over 700 acres of land to China. He says handing over the lands to China would have an impact on India's security.

"From the angle of India's security and the sustainability of the Eelam Tamils, this will cause a huge impact. Sri Lanka's action to hand over these two stretches of lands, in particular handing over 500 acres to the south of Iranaimadu and then in the border areas of Jaffna and Killinochi - near the Mandalai Pillayar Kovil - Pullaveli, Kattaikadu, Vetrilaikeni is very dangerous".

Activists like Jeyakumar say this is not the first time that such an effort is taken by Colombo. Earlier too such attempts were stopped by the public.

"Even two or three years back at Kowdarimunai in Killinochi district, the government took forward a proposal to sell a bit of coastal area to China for sea cucumber farms. But after strong protests from the public and people's representatives, we understand that proposal has been dropped. Within 2-3 years of that issue dying down this proposal (of handing over land to China) has picked up".

He also questions the rationale behind handing over the lands in the traditional homeland to a foreign country and questions how the country would handle if such a demand is raised by other nations which have loaned huge sums of money to Sri Lanka.

"If handing over these land areas to China in lieu of the loans, Sri Lanka will be in a situation to act similarly for loans obtained from India, Pakistan, and European countries. If such a situation arises then Sri Lanka may have to sell such places and as the next action, they will try to sell areas where people live".

Sivagnanam Siritharan says continuous governments have been attempting Sinhala colonization of the North through various means. He alleges that under the guise of bringing in the Mahaweli project to the south of Iranaimadu associated with huge job opportunities, Sinhala resettlements were planned, thereby forcefully trying to change the demographics and annihilation of the Tamil identity and ethnicity.

In places like Karippattamurippu - Oddusuddan, the government is planning to forcefully grab land under the guise of Buddhist artifacts being found by the Archeology department according to the MP.

We will take all efforts and action to stop such colonization and handing over of lands to China.


Karuppiah Jeyakumar fears once the lands are handed over to China, Chinese people will start settling there or will set up research institutions with strategic intentions which will adversely impact the Tamil people in Killinochi and Mullaitivu districts. He says such a move by the government will not only affect their livelihood but also seriously affect future generations.

"Sri Lanka is now not only selling monkeys but also the forest areas where they live to China. The situation is very scary in the country. First the monkeys, then the lands, next the people will be exported?" he queries.

Over 300 families in the Killinochi district alone live with their relatives amidst tiring circumstances as they don't have their own lands to stay.

# A Brief Introduction Of Rev. Dr. G. U. Pope And His Contribution To Tamil

By: K. Ananthanathan, MA, MSW, RSW




On the 200th anniversary of his birth on April 24, 2023, Reverend George Uglow Pope, better known as Rev. Dr. G.U Pope, is still a relatively unknown but incredibly impactful Canadian Tamil scholar. The Canadian born Pope contributed significantly to the scholarship of Tamil literature through his English translations of seminal Tamil texts such as Thirukkural and Thiruvasagam. More importantly, his contributions to Tamil society are going to be featured in this article and hopefully with more discussion of him, continue to be celebrated in Tamil society.

Rev. Dr. George Uglow Pope was born on April 24, 1820, in Bedeque, Prince Edward Island in Canada and died on February 11, 1908, Walton Well Road, Oxford United Kingdom. The family moved to Nova Scotia, St. Vincent's before returning to Plymouth, England in 1826 where the elder Pope became a prosperous merchant and ship-owner. George Uglow Pope's and his younger brother William Burt Pope studied at the Wesleyan schools in Bury and Hoxton and at the age of fourteen George Pope joined missionary service in southern India.

When he arrived in Tamil Nadu, he was taken by the society, the culture and literature of the Tamils. Of Tirukkural, Pope said "the Tirukkural has entered the very soul of a whole people. It proclaims in sweetest mystic couplets virtue, truth, wealth and joy. Thiruvalluvar is a seer of spotless souls." Pope also remarked upon the Tamil culture and history, saying that "the great antiquity of Tamil, which is the one worthy rival of Sanskrit, is abundantly plain. The ancient grammatical works existing in Tamil and its wonderful metrical system prove its assiduous cultivation for long ages."

In addition to the translation work, Pope built the G. U. Pope College, Sawyerpuram near Thoothukudi in Tamil Nadu and many educational institutions to help and promote the education of poor students in Tamil Nadu. He built a variety of Tamil Grammar schools, various English translations of classical Tamil texts that helped widen their distribution across many countries outside of Tamil Nadu over the course of living in south India for 40 years.

In his later years, Rev. G. U. Pope left south India, settling in Oxford, England, where he made mark as a senior lecturer in Tamil and Telugu languages at Oxford University. Also, he received an honorary MA in 1886 and a Gold Medal of the Royal Asiatic Society in 1906. He worked as a senior lecturer in classical languages at Balliol College, at Oxford University in England. Rev. Dr. G. U. Pope died on February 11, 1908, in Oxford.

In honour of what would have been his 200th birthday on April 24th, 2023, the Canadian government is releasing a commemorative stamp in his honour. Beyond this stamp, he has a statue in his likeness on Merina Beach in Chennai. The stamp and statue are praise for a Tamil scholar whose English translations of Tamil texts especially of Tirukkural and Tiruvasagam, were important contributions to the Tamil culture and proper introduction for non-Tamil speakers to foundational classic Tamil texts. Particularly, in the Thiruvasagan author Manikavasagar 67 times called himself as a dog Rev. Dr. G. U. pope translated instead of dog, he used the word cur that means inferior dog this shows us his deep knowledge of classical Tamil language. While his contributions and his presence in South India during that time as an Anglican missionary are not well come without controversy, what hopefully shines through is his genuine love of Tamil culture and classical Tamil language in a time period where that was not the case with Europeans in South India. In his grave Rev. Dr. G. U. Pope requested in his last Will they should write "A student of Tamil" said to be seen in his grave in Oxford. His main contribution was the translation of Thirukkural and thiruvasagam at the age of 86 years. Particularly he described Thiruvasagam as "Bone Melting" text in Tamil.



# அதிமுக பொதுச் செயலாளராக பழனிசாமியை அங்கீகரித்தது தலைமை தேர்தல் ஆணையம்



அதிமுக பொதுச் செயலாளராக பழனிசாமியை தலைமை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. இதையடுத்து, கட்சியின் தலைமை அலுவலகம் முன் திரண்ட தொண்டர்கள், பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர், அதிமுகவின் நிரந்தரப் பொதுச் செயலாளர் பதவி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி ஆகியோர் பொறுப்பேற்றனர்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது முதல்வர் வேட்பாளர் தேர்வு, தேர்தலுக்குப் பின்னர் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தேர்வு, மாநிலங்களவை உறுப்பினர் தேர்வு ஆகியவற்றின்போது இபிஎஸ், ஓபிஎஸ் ஆகியோருக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனால், கட்சிக்கு ஒற்றைத் தலைமை தேவை என முடிவு செய்த பழனிசாமி, கடந்த ஆண்டு ஜூலை 11ம் தேதி நடைபெற்ற பொதுக்குழுவில் அதிமுக இடைக்காலப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேலும், பன்னீர்செல்வம், அவரது ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கினார். ஆனால், பொதுக்குழுக் கூட்டம் செல்லாது என்று அறிவிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் வழக்குத் தொடர்ந்தார். இதில், பொதுக்குழு செல்லும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் பொதுச் செயலாளர் தேர்தல் அறிவிக்கப்பட்டு, பழனிசாமி வேட்புமனு தாக்கல் செய்தார். இந்த தேர்தலையும் நிறுத்தக் கோரி பன்னீர்செல்வம் உயர் நீதிமன்றத்தை நாடினார். அதிலும் பழனிசாமிக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததால், மார்ச் 28ம் தேதி அதிமுக பொதுச் செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்றுக் கொண்டார். எனினும், ஒருங்கிணைப்பாளர் கையெழுத்தின்றி நடத்தப்பட்ட அதிமுக பொதுக்குழு மற்றும் பொதுச் செயலாளர் தேர்தல் செல்லாது என்று பன்னீர்செல்வம் கூறிவந்தார். இதற்கிடையில், பொதுக்குழு மற்றும் பொதுச் செயலாளர் தேர்வு ஆகியவற்றை தேர்தல் ஆணையம் அங்கீகரிக்காமல் இருப்பதை எதிர்த்து, டெல்லி உயர் நீதிமன்றத்தில் பழனிசாமி வழக்குத் தொடர்ந்தார். இதில் 10 நாட்களுக்குள் முடிவு எடுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு நீதிமன்றம் உத்தர விட்டது.

இந்த சூழலில், அதிமுக பொதுக்குழு மற்றும் பழனிசாமி பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றதை தேர்தல் ஆணையம் அங்கீகரித்து, அதற்கான உத்தரவை இணையதளத்தில் நேற்று வெளியிட்டது.எனினும், இந்த உத்தரவு நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது.அதேபோல, கர்நாடகா சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்குமாறு, அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று சட்டப்பேரவையில் இருந்தபோது, தேர்தல் ஆணைய உத்தரவு வெளியானது. இதையடுத்து, அதிமுக எம்எல்ஏக்கள் பழனிசாமிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.மேலும், மாவட்டச் செயலாளர் ஆதி ராஜாராம் தலைமையில் அதிமுக தொண்டர்கள் கட்சி தலைமை அலுவலகத்துக்குச் சென்று, பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும், எம்ஜிஆர், ஜெயலலிதா சிலைகளுக்கு மாலை அணிவித்தும் கொண்டாடினர்.

# அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து திருச்சி மாநாட்டில் முடிவு ஓபிஎஸ் ஆதரவாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் தகவல்



அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து திருச்சியில் 24ல் நடக்கும் மாநாட்டில் முடிவு எடுக்கப்படும் என்று ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறினார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: பொதுக்குழுவுக்கு தடை விதிக்காத காரணத்தாலும் சென்னை உயர் நீதிமன்ற அமர்வில் இடைக்கால தடை கேட்டதை அந்த அமர்வு ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையிலும் தேர்தல் ஆணையம் இருக்கின்ற சூழலை வைத்து ஒரு முடிவை எடுத்து அறிவித்துள்ளனர். அவர்களாகவே எந்த முடிவையும் எடுக்கவில்லை.

எவ்வாறு ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தற்காலிகமாக இரட்டை இலை சின்னம் தரப்பட்டதோ அதேபோல்தான் இரட்டை இலை சின்னம் தரப்பட்டுள்ளது. நிர்வாகிகளையும் சட்டவிதிகளையும் பொருத்தவரையில் தேர்தல் ஆணையம் தங்கள் கருத்துகளை கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். இறுதி தீர்ப்பு நீதிமன்றத்தில் வருகின்ற வரையில் நாங்கள் அதை பதிவு செய்கிறோம் என்று சொல்லியுள்ளனர். எனவே, இதை ஒரு புதிய பிரச்சினையாக கருதவேண்டிய அவசியமில்லை.

நாங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல ஒவ்வொரு அமர்விலும் தங்களுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில்தான் நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்கியுள்ளனர். அதனால் குழப்பம் ஏற்பட்டுள்ளதே தவிர வேறு அல்ல.

ஜெயலலிதா நிரந்தர பொதுச்செயலாளர் என்று போட்டார்கள். இப்போது அதை நீக்கிவிட்டு பொதுச்செயலாளர் என்று கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன என்பன உள்ளிட்ட பல்வேறு முக்கியமான அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளை ஏறி ஏறி கால்கள் தளர்ந்துவிட்டன. அதனால்தான் மக்கள் மன்றத்தை நோக்கி ஏப்ரல் 24ம் தேதி திருச்சியில் மாநாடு நடத்துகிறோம். அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து திருச்சி மாநாட்டில் தெரியும்.

2024க்குள் அனைவரையும் ஒன்று சேர்த்துவிடுவேன் என வி.கே.சசிகலா நம்புகிறார். அவர் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம். தேர்தலுக்கு பின்னர்தான் தீர்ப்பு வழங்குவோம் என்று சொன்னார்கள். திடீரென இரட்டை இலை பழனிசாமி தரப்பினருக்கு சொந்தம் என்று தீர்ப்பு வழங்குகிறார்கள். யாரை நம்புவது யாரை நம்பாமல் இருப்பது என்று தெரியவில்லை.

பொதுச்செயலாளராக தேர்தல் ஆணையம் அங்கீகரித்துவிட்டதால் இனி திமுகவை வலுவாக எதிர்க்கப் போகிறோம் என்று பழனிசாமி கூறலாம். அவர் மட்டுமே எதிர்க்க முடியும். மக்கள் இல்லையே. ஈரோடு தேர்தலில் பாஜக ஆதரவு இல்லை எனில் அதாவது, வடஇந்திய தொழிலாளர்கள் 16 ஆயிரம் பேர் வாக்களிக்கவில்லை என்றால் அதிமுகவுக்கு டெபாசிட் போயிருக்கும். அதுதான் நிலைமை. பழனிசாமிக்கு தோல்வி தொடர்கிறது. அவரை முன்னிலைப்படுத்த வேண்டாம் என்று செயற்குழு கூட்டத்தில் நான் முன்னரே சொன்னேன். எனது அனுபவத்தில் சொல்கிறேன். கடந்த 67 ஆண்டுகளாக அரசியலில் பார்க்கிறேன். எம்ஜிஆருக்கும் கருணாநிதிக்கும் இடையே போட்டிவந்தபோது எம்ஜிஆரை அங்கீகரித்தனர். அதேபோல், ஜெயலலிதாவுக்கும் ஜானகிக்கும் இடையிலான போட்டியின்போது ஜெயலலிதாவை அங்கீகரித்தனர். எனவே, பொதுமக்கள் சரியாக முடிவு எடுப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# இறுதிக்கட்டத்தில் சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கு விசாரணை: சிபிஐ தகவல்



சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என உயர் நீதிமன்றத்தில் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ், இவரது மகன் பென்னிக்ஸ். இவர்களை கடந்த 2020 ஜூனின் கரோனா கட்டுப்பாட்டு நேரம் தாண்டி மொபைல் போன் கடையை திறந்து வைத்திருந்தது தொடர்பாக சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

விசாரணையின் போது போலீஸார் தாக்கியதில் தந்தை, மகன் உயிரிழந்ததாக காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் ரகுகணேஷ், பாலகிருஷ்ணன் மற்றும் காவலர்கள் என 9 பேரை கொலை வழக்கில் சிபிஐ கைது செய்தது.கைதான நாளிலிருந்து 9 பேரும் மதுரை மத்திய சிறையில் இருந்து வருகின்றனர். இந்நிலையில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் ஜாமீன் கோரி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். அதில், சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை விசாரணை மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. வழக்கில் மொத்தம் 132 சாட்சிகள் உள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் நட்சத்திர சாட்சிகளான ரேவதி, பியூலா உட்பட 47 சாட்சிகளிடம் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாட்சிகளை விசாரிக்க இன்னும் 5 ஆண்டுகள் ஆகும்.

நான் கைதான நாளிலிருந்து 3 ஆண்டுகளாக தொடர்ந்து சிறையில் இருந்து வருகிறேன். எனவே, ஜாமீன் வழங்க வேண்டும். நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என ஸ்ரீதர் கூறியிருந்தார்.இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சிபிஐ தாக்கல் செய்த பதில் மனுவில், சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கு விசாரணை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் 6 சாட்சிகளை மட்டுமே விசாரிக்க வேண்டியுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறுக்கு விசாரணை என்ற பெயரில் 4 மாதங்களாக விசாரணையை இழுத்தடித்து வருகின்றனர். ஒரு சாட்சியை விசாரிக்க ஒன்றரை மாதங்கள் ஆகின்றன.கோடை விடுமுறை காலத்திலும் சாத்தான் குளம் வழக்கை கீழமை நீதிமன்றம் விசாரிக்க அனுமதி வழங்க வேண்டும். மனுதாரருக்கு ஜாமீன் வழங்கினால் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளது. இதனால் ஜாமீன் வழங்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து மனு மீதான தீர்ப்பை ஏப். 24க்குநீதிபதி தள்ளி வைத்தார்.

# இலங்கையின் 'குரங்குப் பிரச்சனை:
## உதயனின் சிறப்பு நேர்க்காணல்

உலகெங்கும் இல்லாத வகையில் சுமார் ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக இலங்கையின் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் தனது அமைச்சக கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நாட்டில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யலாம் ஒரு தரப்பும், அது எப்படிச் செய்ய முடியும் என்று மறு தரப்பும் வாதிட்டன. ஆனால் மேலோட்டமான இந்த வாதங்களிற்கு அப்பாற்பட்டு இதிலுள்ள யதார்த்தங்களை உள்ளூர் ஊடகங்கள் ஆராயவில்லை.

சீனா இலங்கையிடமிருந்து பெருந்தொகையான அளவிற்கு குரங்குகளை வேண்டியுள்ளது என்றும், அவை தமது நாட்டின் மிருகக்காட்சி சாலைகளில் வைக்கப்படும் என்று வெளியான தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் இந்த தகவல் வெளியாகி சுமார் இரண்டு வாரங்களிற்கு பிறகு கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

ஆனால், சீனாவின் இந்த மறுப்பறிக்கை தொடர்பில் இலங்கை இதுவரை வெளிப்படையாக கருத்துக்கள் எதையும் தெரிவிக்கவில்லை. அதேவேளை குரங்கு ஏற்றுமதிக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் சில தகவல்கள் கூறுகின்றன. இவற்றை சுயாதீனமாக உதயனால் உறுதி செய்ய முடியவில்லை.

இப்படியான குழப்பங்களிற்கு மத்தியில் இலங்கையில் இருந்து குரங்குகள் ஏற்றும் சாத்தியம் உண்டா என வவுனியா பல்கலைக்கழகத்தின் வனவிலங்கு, வனச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி சண்முகசுந்தரம் விஜயமோகனுடன் ஓர் செவ்வி.

செவ்வி கண்டவர் எமது யாழ் செய்தியாளர் நடராசா லோகதயாளன்.

இலங்கையில் இருந்து நூறு ஆயிரம் குரங்குகள் சீனாவிற்கு ஏற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுவது தொடர்பில் பல கருத்துக்கள் வெளிவருகின்றன. அவ்வாறு நூறு ஆயிரம் குரங்குகளை ஏற்ற முடியுமா, அதற்கான சாத்தியம் உண்டா, அதில் நன்மைகள் அதிகமா அல்லது தீமைகள் அதிகமா?

"நாட்டில் எத்தனை குரங்குகள் உள்ளன என்ற கணக்கெடுப்பு இதுவரை கிடையாது. இவ்வாறு கணக்கெடுப்பு இடம்பெறாது எவ்வாறு நூறு ஆயிரத்தை ஏற்றுமதி செய்வது என்ற முடிவிற்கு வந்தனரோ தெரியாது. அதே நேரம் முதலைகள் தொடர்பான கணக்கெடுப்பு இடம்பெற்று தற்போதுதான் நிறைவுறுகின்றது.

சிறுத்தைகள் 1,500 வரையில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதோடு 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் மிக குறைந்தது 5584 யானைகள் உள்ளதாக கணக்கிடப்படுகின்றதோடு வளர்ப்பு யானைகள் 107 உள்ள அதேநேரம் மின்னவளவில் 82 யானைகளும் உள்ளதாக அப்போது கண்டறியப்பட்டன".

அப்படியானால் குரங்குகளின் கணக்கெடுப்பின்றி அவற்றை ஏற்றுமதி செய்ய அரசு சீனாவுடன் ஆலோசித்து வருவது யதார்த்த ரீதியில் எந்தளவிற்கு சாத்தியமானது?

"மில்லியனை அண்மித்து குரங்குகள் இலங்கையில் இருப்பதாக கருதி அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிட்டாலும் நூறு ஆயிரம் குரங்குகள் ஏற்றுமதி செய்வதென்பது ஒருபோதும் இடம்பெற முடியாத காரியம். இலங்கையில் "மெக்காக்கா சினிக்கா" என்னும் இனமே அதிகமாக உண்டு. இதனையே பலரும் செங்குரங்கு என்பர் இதிலும் மூன்று இனம் உண்டு குளிர் வலயம், உலர் வலயம், இடை வலயம் ஆகிய இடங்களில் வாழும் குரங்கினங்கள் அவை. இதற்கு அப்பால் கருங்குரங்குகளில் இரு இனமும் என குரங்கினத்தை ஒத்த தேவாங்கு என மொத்தமாகவே 4 இனங்களே உண்டு. இவை கூட்டமாகவே வாழும் இதில் நூறு ஆயிரம் குரங்கை ஏற்றுமதி என்பது ஒருபோதும் சாத்தியமே அற்றது. ஏனென்றால் இதில் அரசிற்கு ஒரு சில தடை அல்ல பல தடைகளே ஏற்படும். இந்த குரங்கு ஏற்றுமதி என்பது வெறுமனே செய்தியாகவும் தகவலுமாகவே இருக்குமே அன்றி அப்பணி இடம்பெறாது. வேண்டுமானால் ஒரு 50 அல்லது 100 குரங்கை எடுத்துச் செல்ல முடியும் அதற்கும் பெரும் செலவை எதிர்கொள்ள வேண்டும். அது சீனா போன்ற நாட்டிற்கு பெரிய விடயம் இல்லை என்பதனால் ஒரு நூறிற்கும் உட்பட்ட குரங்கை எடுத்துச் செல்வர்.



ஆனால் மறுபுறம் குரங்குகளால் விவசாயம் பெருமளவிற்கு பாதிக்கப்படுகிறது என்பது உண்மை தானே. அப்படி ஏற்படும் போது நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படும் வாய்ப்பு உள்ளதல்லவா?

"தற்போது குரங்குகளிற்கு காடுகளில் உணவு நெருக்கடி ஏற்படுவதனால் அவை நகரை நோக்கி வருகின்றன அல்லது தோட்டங்களை நோக்கி வருகின்றது. இதனால் விவசாயிகளும் உற்பத்தியாளரும் பெரும் நட்டத்தையும் ஏற்படுத்துகின்றது என்பது மிகப் பெரும் உண்மை அதனால் இதனை கட்டுப்படுத்தவே வேண்டும். இதற்கு தடுப்பு முறைக்கு முயற்சிக்கும் ஓர் உறுப்பினராகவும் நான் தற்போது உள்ளேன். குரங்குகளால் ஏற்படும் பாதிப்பை சரி செய்வதற்கு அறிவியல் ரீதியான நடவடிக்கையே தேவை. குரங்குகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காணலாக் என்பது நடைமுறைக்கு சரிப்பட்டு வராது".

குரங்குகளை சீனாவிற்கு ஏற்ற முடியுமா என்கிற பிரச்சனை ஒரு புறம் இருந்தாலும், பெருந்தொகையான அளவில் அவற்றை பிடிப்பதே பெரும் சவால் இல்லையா?

"குரங்குகள் கூட்டம் கூட்டமாகவே வாழ்வதனால் அவற்றை பிடிப்பது சுலபமல்ல. ஒரு சில குரங்குகள் பிடிபட்டால் எஞ்சியவை அந்த இடத்தை விட்டு நகராது அல்லது சத்தம் எழுப்பினால் சிலவேளை தாக்கவும்கூடும். இவை அனைத்தையும் தாண்டி பிடித்து விட்டால் ஏற்ற முற்படும் அரச பலம் செல்வாக்கினை விடவும் மிஞ்சிய சக்தி ஒன்று உண்டு அதுதான் இந்த மிருகங்கள் தொடர்பில் பேசுபவர்கள். அவர்கள் மிருகவதை, மனித நேயம், காருண்யம் என்றெல்லாம் பேசுவார்கள் அப்போதும் எடுபடவில்லை என்றால் மதங்களுடன் கொண்டு சென்று முடிச்சுப் போடுவார்கள் அதேநேரம் சுற்றுலாப் பயணிகளை தடுப்போம் என அரசிற்கு அச்சுறுத்துவார்கள். இவ்வாறு அச்சுறுத்துபவர்கள் அலுவலகங்களில் இருந்து உத்தரவு போடும் அதிகாரம் கொண்ட சொகுசு வாழ்க்கையை மட்டும் கொண்டவர்கள் அல்லது ஆராச்சிக்காகவும், ஆய்விற்காகவும் காடுகளில் அலைந்து படித்தவர்களாகவுமே இருப்பார்களே அன்றி குரங்கு அல்லது மிருகங்களின் தாக்குதலிற்கு இலக்காகும் பிரதேசங்களில் வாழ்வபவராக இல்லாதபோதும் அவர்களின் குரலே எடுபடும் ஏனெனில் அவர்கள் கட்டமைக்கப்பட்ட அமைப்புக்களின் தொடர்பில் இருப்பவர்கள். இதனால் ஏழை விவசாயிகளினதும் அதற்காக முயற்சித்தவர்களும் தோல்வி அடைவர்".

அப்படியென்றால் இந்த குரங்குப் பிரச்சனைக்கு என்னதான் தீர்வாக அமையும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

"இவற்றின் அடிப்படையிலேயே நான் ஆரம்பத்திலேயே கூறிவிட்டேன் - குரங்குகள் இலங்கையில் இருந்து சீனாவிற்கு அல்ல எங்கையுமே ஏற்றுமதி இடம்பெற மாட்டாது என்று ஏற்றுமதி இடம்பெறாதுவிட்டால் எமது நாட்டிலேயே விரைவில் விவசாயிகளோ ஊர் மக்களோ இரகசியமான முறையில் அதிக தொகையை அழிக்க முற்படுவர் என்பதும் உறுதி. தற்போது இந்த மிகப் பெரும் யானைகளையே அழிப்பவர்களிற்கு குரங்கு, மயிலை அழப்பது ஒன்றும் பெரிய விடயமாகவும் இருக்காது. இவற்றின் அடிப்படையில் இவ்வாறான மிருகங்களை நாட்டிற்குள்ளேயே விஞ்ஞான ரீதியில் அழிக்கும் நிலமை விரைவில் ஏற்படும். அதேநேரம் இவற்றை கட்டுப்படுத்தும் பொறிமுறையை ஏற்படுத்த முடியுமா என நாம் ஆராச்சியிலும் இறங்கி விட்டோம்" என்றார்.



# ஐயப்பன் கோவில் ஜோதிவிழா

ஐயப்பன் கோவில் அழகிய மேடையில்
ஆரம்பம் ஆனது ஜோதிவிழா
மயக்கும் வகையிலே மைதானம் இருந்ததே!
மூத்தோர் இளையோர் கூடினரே!
பார்க்கும் இடமெலாம் பாவையும் காளையும்
பலவித ஆடையில் இருந்தனர்
சோர்விலாத் தொண்டர் சுழன்று உழைத்தனர்
சாரியாய் மக்கள் வந்தனரே!

சுடச்சுடக் காரம் சுண்டற் கடையும்
சூடாய்க் கோப்பிப் பானமும்
கடகடாச் சத்தமாய் கொத்து றொட்டியும்
காண்போர் கண்களைக் கவர்ந்தது
அவித்த மரவள்ளி அதனுடன் சம்பல்
ஆவி பறக்கும் தோசை
குவித்து வைத்த கச்சான் கடலை
குறியாய் வாங்கி உண்டனரே!

பகட்டுப் பளபள பட்டுக் கடையிலே
பாவையர் எல்லாம் நிரம்பினர்
நகர முடியா நெருங்கி நின்றே!
நயமாய் வாங்கிக் குவித்தனர்
பொட்டும் மாலையும் பொருந்தக் காப்பும்
பாவாடை சட்டையும் வாங்கியே!
விட்டுக் கொடுக்கா விலைகள் பேசியே!
விதமாய் வாங்கிக் கொண்டனரே!

பக்திப் பாட்டும் பலவித நடனமும்
பார்ப்பவர் கண்களைக் கவர்ந்ததே!
பக்க வாத்தியப் பக்கத் துணையுடன்
பாரதப் பாடகர் பாடினர்
இரண்டு நாட்கள் இனிமையாய் நடந்ததை
எப்போ வருமென ஏங்கினரே!
வருடம் ஒருமுறை வந்திடும் திருவிழா
விரும்பிப் பார்க்கும் பெருவிழாவே!

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# ராஜஸ்தான் நந்தினி குப்தா "மிஸ் இந்தியா" பட்டம் வென்றார்

**2023-ம் ஆண்டுக்கான மிஸ் இந்தியா அழகியாக ராஜஸ்தானை சேர்ந்த நந்தினி குப்தா கிரீடம் சூடியுள்ளார்**



2023-ம் ஆண்டுக்கான மிஸ் இந்தியா அழகி போட்டி மணிப்பூரில் நடைபெற்றது. இந்த போட்டியில், ராஜஸ்தானின் கோடா நகரை சேர்ந்த நந்தினி குப்தா (வயது 19) என்பவருக்கு முதல் இடம் கிடைத்தது.

அழகிப் போட்டியில் 2-வது இடம் டெல்லியை சேர்ந்த ஷ்ரேயா பூஞ்சா என்பவருக்கும், 3-வது இடம் மணிப்பூரை சேர்ந்த தவுநாவ்ஜாம் ஸ்டிரெலா லுவாங் என்பவருக்கும் கிடைத்தன. அவர்களுக்கு போட்டியை நடத்திய பெமினா மிஸ் இந்தியா அமைப்பு தனது இன்ஸ்டாகிராமில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டது.

போட்டியில் வெற்றி பெற்ற நந்தினி வர்த்தக மேலாண்மை பட்டப்படிப்பை படித்துள்ளார். இந்த போட்டியில் பார்வையாளர்களை மகிழ்விக்க, பாலிவுட் நடிகர், நடிகையரான கார்த்திக் ஆர்யன், அனன்யா பாண்டேவின் நடன நிகழ்ச்சி நடந்தது. அதன்பின், நடிகை பூமி பட்னாகர் நடத்திய நிகழ்ச்சியும் ரசிகர்களை பரவலாக கவர்ந்தது.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 688

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

## ஜெபம்

### தேவ வாக்குத்தத்தம் - தாவீது ராஜாவின் ஜெபம்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். **- யோவான் 14: 13-14**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். **- யோவான் 15: 7**

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள். **- எபேசியர் 6: 18-20**

### ஆபிரகாமின் ஜெபம்

அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ? பட்டணத்துக்குள்ளே ஒரு வேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள்நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ? துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக, நீதிமா னையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக, சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யா திருப்பாரோ என்றான். அதற்குக் கர்த்தர்: நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுவதையும் இரட்சிப்பேன் என்றார். அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலு மாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன். ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்தி ருப்பார்கள், அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணமுழுவதையும் அழிப்பீரோ என்றான். அதற்கு அவர்: நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார். அவன் பின்னும் அவரோடே பேசி: நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். அப்பொழுது அவன்: நான் இன்னும் பேசுகிறேன், ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக, முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப் பதில்லை என்றார். அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன், இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: இருபது நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். அப்பொ ழுது அவன்: ஆண்டவருக்குக் கே-ாபம் வராதிருப்பதாக, நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன், பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார், ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான். இப்படியாக ஆபிரகாம் தேவனோடு உரையாடி தமது ஜனத்திற்காக வேண்டுதல் செய்ததுபோல நாமும் எமக்காக, எமது இன ஜன பந்துக்களுக்காக ஜெபித்து ஜெயம் கொள்வோம்.

### லோத்தின் விண்ணப்பத்தை கேட்ட தேவன்

உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே, இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்று தேவன் லோத்துவிற்கு சொன்னார். அதற்கு லோத்து: அப்படியல்ல ஆண்டவரே, உமது கண்களில் உமது அடியேனுக்கு கிருபை கிடைத்ததே, என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாக விளங்கப்பண்ணினீர், மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன். அதோ, அந்த ஊர் இருக்கிறதே, நான் அதற்கு ஓடிப்போகத்தக்கதாய் அது கிட்ட இருக்கிறது, சின்னதுமாய் இருக்கிறது, என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டும், அது சின்ன ஊர்தானே என்றான். அதற்கு அவர்: நீ கேட்டுக் கொண்ட ஊரை நான் கவிழ்த்துப்போடாதபடிக்கு, இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன். தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக் கொள், நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது என்றார், ஆகையால் அந்த ஊர் சோவார் என்னப்பட்டது. லோத்து சோவாருக்குள் வரும்போது பூமியின்மேல் சூரியன் உதித்தது. அப்பொழுது கர்த்தர் சோதோமின்மேலும் கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்.

***தொடரும்...***




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

CRC
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மலேசிய மடல்

# கண்ணையும் கருத்தையும் கவரும் மலேசியா பத்துமலை இராமாயணக் குகையில் உடற்பயிற்சி – தியான மையம்



நக்கீரன்

**ப**த்துமலை, ஏப்.18:

மலேசியாவில் திருமுருக வழிபாட்டு தலைத்தளமாக விளங்கும் பத்துமலை வளாகத்தில் அமைந்துள்ள இராமாயணக் குகையில் யோகப் பயிற்சி மையம் திறக்கப்பட்டுள்ளது.

இராமாயணக் குகை தற்பொழுது பக்தர்களையும் பொதுமக்களையும் கவரும் வண்ணம் புத்தெழுலுடன் காட்சி தருகிறது. இராமாயண நெடுங்கதையில் உள்ள பெரும்பாலான பாத்திரங்களையும் அதில் அடங்கியுள்ள கருத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இங்கு வடிவமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்டமான கும்பகர்ணன் சிலையில், அவரின் மீசை பிரமிப்பாக உள்ளது.


















அத்துடன், அங்கு வரும் பக்தர்கள், சுற்றுப் பயணிகளை வெகுவாகக் கவரும் வகையில் சுவர் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அவற்றுக்கு தகுந்தாற்போல வண்ண விளக்குகள் பாய்ச்சும் ஒளிவெள்ளம் இன்னும் அழகுசேர்க்கின்றன.

இந்த நிலையில், இராமாயணக் குகையின் மேல்தளத்தில் ஏறக்குறைய 500 பேர் கலந்து கொள்ளும் வகையில் தியானக் கூடமும் உடற்பயிற்சி மையமும் உருவாக்கப்பட்டு, ஏப்ரல் 17-ஆம் நாள் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பத்துமலை திருத்தலத்தை இந்து மையமாக உருவாக்கும் வகையில் கோலாலம்பூர் அருள்மிகு மாரியம்மன் ஆலய தேவஸ்தான தலைவர் டான்ஸ்ரீ ஆர். நடராஜா அங்கு தொடர்ந்து மேம்பாட்டுப் பணியை மேற்கொண்டு வருவதன் ஒருகூறாக, இந்தப் புதிய கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இராமாயணக் குகையை விளம்பரப்படுத்தவும் ஆன்மிக அன்பர்களுடன் சுற்றுப் பயணியரையும் கவர்வதற்கு ஏதுவாக "அருள்மிகு இராமாயணக் குகை சென்.பெர்." என்ற பெயரில் தனி நிறுவனம் செயல்படுகிறது.

இந்த நிறுவனம், இங்கு உடற்பயிற்சியுடன் தியானத்தையும் வழிநடத்துவதற்காக "மலேசிய மூப்பெதிர்ப்பு யோகா மற்றும் ஆரோக்கிய அமைப்பை அமர்த்தி உள்ளது.

இதன் தொடர்பில் அருள்மிகு இராமாயணக் குகை நிறுவனத்திற்கும் மூப்பெதிர்ப்பு யோகா மற்றும் ஆரோக்கிய அமைப்பிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஏப்ரல் 17 மாலையில் அருள்மிகு இராமாயணக் குகை நிறுவனம் ஏற்பாடு செய்த செய்தியாளர்க் கூட்டத்தில் மாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் டத்தோ ந.சிவக்குமார் முன்னிலையில் இந்தக் கையெழுத்தும் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இராமாயண குகை நிறுவனத்தின் சார்பில் டத்தோ முகமட் முஸ்த.்.பாவும் மாஸ்டர் அட்ரியான் சுரேஷும் கையொப்பம் இட்டனர்.

உடற்பயிற்சியுடன் மனதிற்கு ஆன்ம வலிமை, புத்துணர்ச்சி, மன அமைதி ஆகியவற்றையும் அளிக்கும் வகையில் தியானப் பயிற்சி வழங்கும் பொறுப்பை மாஸ்டர் அட்ரியான் சுரேஷ் அந்தோணி ஜான் ஏற்றுள்ளார்.

இவரின் தலைமையில் வரும் செப்டம்பர்த் திங்கள் 5 முதல் 9-ஆம் நாள்வரை இராமாயணக் குகையில் "உலகளாவிய அமைதி, யோகா மற்றும் ஆரோக்கிய உச்சி மாநாடு" நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் செய்தியாளர்கள், பொதுமக்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த நிருவாகியருடன் பத்துமலை தமிழ்ப்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி சரசுவதி செங்கன் தலைமையில் ஆசிரியர் ஏ. விக்டர் உட்பட அதிகமான ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.







நக்கீரன் - Nakkeeran 013-244 36 24



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு:
0091-9840160068 / 9940431377



# இவ்வார ராசிபலன்

## 21-04-2023 வெள்ளி தொடக்கம் 27-04-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியம். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகாகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்காண வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டம். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V





**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யேசானை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T




**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையக்கடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையக்கடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரம். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்க்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q

(தொடர்ச்சி 22 பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(21 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1
அதிர்ஷ்ட, நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்திசாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடுரூபவ் மனை, யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரித் தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்யம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

## கடந்தவையும் கடப்பவையும் (55)

பத்தாம் வகுப்பில் பழக்கமானவள் ‘பத்து’
‘பத்மாவதி’ இயற் பெயர் இவளுக்கு

வல்வை மகளிர்தந்த நல்ல நண்பி
செல்லமாகக் கதைப்பாள் நன்றாகவே சிரிப்பாள்

சத்தமான குண்டுகளால் சித்தம் கலங்கிநிக்க
உத்தமி காட்டினாள் ஊறணிப் பாதையிதை

கிட்டடியில் விழுந்தாலும் பயப்படாள் - உன்னை
விட்டுவிடுவேன் வீடுவரை என்றிடுவாள்

கூடவே வந்து மறுபடியும் திரும்பிடுவாள் - வெடிக்குது
போகாதே என்றாலும் கேட்கமாட்டாள்

படிப்பிலும் விருப்பம் கொண்டவள் - படித்தாள்
இடப்பெயர்வு பிரித்தது நட்புக்களை - கூட

படித்தவர்கள் பலரின் பாதைகள் மாறின - சிலர்
வெடிகளுக்கும் இரையாயினர் - ஆண்டுகள்

இரண்டு போக அமைதி ஒன்றும் உருவாக - சிலகாலம்
காடுகளில் வாழ்ந்தவர்கள் நாடுவர - ஒருநாள்

நானும் கண்டேன் தூரத்தே - அங்கு
நாலுபேர் நடுவினிலே பாரதியின் புதுமைப்பெண்

நிமிர்ந்த நடையுடன் நேரான பார்வையுடன் - கொஞ்சம்
தளர்ந்த இடையில் அணிந்த பட்டிக்குள்

இருந்த கைத்கதுவக்கும் அவள் நடைக்குஏற்ப
கொடுத்த ஒரு கம்பீரத்தோடு -அன்று

பத்தோடு பதினொன்றாய் நின்றபடி - தூரத்தே
பத்துவைப் பார்த்தபோது தெரிந்து கொண்டேன்

இன்று இவள் பத்து அல்ல ‘நளாயினி’ என்று
அன்று ஒருதரம் பார்த்த பின்பு - மீண்டும்

நூற்றுக் கணக்கானோர் மத்தியிலே - மிக
உச்சத்திலே கொஞ்சம் சிரித்த முகத்தோடு

கறுத்த உடையில் பிடித்த படமாக
மாத்திரமே பார்த்ததுண்டு...

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --





REALTOR PRABA BALSUBRAMANIAM
ஆதரவில்
கனேடிய TMS V.S.தெய்வேந்திரனின்
RAJAGEETHAMS
SPB யின் பாடல்களை அதே குரலில் பாடவருகிறார்
SURESH FROM USA
SEVENOTES
இசையில்
UNPLUGGED
647-768-4845
Shagana Rangan
Nilshika Suvaminathan
Harshitha Sivakaran
Ganisha Rasendrakumar
Rithika Jeristus
Maya Jeristus
Svaramy Thusitharan
Tuthunaya Thusitharan
Harshini Kengeswaran
Sinduja Sundararajan
Keneesha Uthayakumaran
Ashvina Aruran
Mathanki Thirugnanasampanthan
MIDDLEFIELD COLLEGIATE INSTITUTE
APRIL - 29TH SATURDAY - 6.30PM
PURCHASE TICKETS :
NEW SPICY LAND VIDEO கடை
416-520-9072
ERRA SUPER MARKET அருகில் SAI ELANTHALIR
416-471-1002 / 416-220-6966
KUMAR VIDEO MARKHAM & SHEPPARD
416-292-9043
MAIN SPONSOR
TITLE SPONSORS
TITLE SPONSORS
Jayasaji JEWELLERY
RE/MAX
RAJ NADARAJAH
JRB
R.R.Rajkumar 647-289-6164
ரங்கனால் நகைமாடம்
647-702-2159
Ruban Sivapathasunthara
MATT MATHISAYAN
CENTURY 21
VARANT HOSPITALITY GROUP
DEVADAS LAW
TEMPLE OF SAREES
MARK FLORIST
SkyRoute
KALAVIYAM VOICE ACADEMY










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்








உதயம் 1411 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 21, 2023


# இலங்கை "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனை வரவேற்று ரொறன்ரோ அமைப்புக்கள் ஏற்பாடு செய்த விழா







இலங்கையின் முதன்மைத் தமிழ்த் தினசரியாக விளங்கும் "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் தனது வெளிநாட்டுப் பயணத்திட்டத்தின்படி கனடா வந்திருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோவில் நடைபெற்ற சந்திப்பும்-உரையாடலும் நிகழ்ச்சியில் பங்கெடுத்த ஸ்ரீகஜன் கனடாவின் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து மகிழ்ந்து உரையாடி உற்சாகமாக இருந்தார். அத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்திற்கு ஆற்றவேண்டிய உதவிகள் தொடர்பாகவும் வழியுறுத்தினார்.

ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு அமைப்பின் தலைவரும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகேந்திரலிங்கம் தலைமை தாங்கினார். மேற்படி நிகழ்வில் கனடாவில் இயங்கிவரும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். கனடாவில் இயங்கிவரும் 'முன்னாள இலங்கை வர்த்தகர்கள் சங்கத்தின்' சார்பில் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களுக்கு கணையாளி ஒன்று அணியப்பெற்றது.

# 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்றத்தில் லோகன் கணபதி மற்றும் உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டார்

17ம் திகதி திங்கட்கிழமை மார்க்கம் தோர்ன்ஹில் சட்ட மன்றத் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அழைப்பின்பேரில் ஒன்றாரியோ சட்டசபை அமைந்திருக்கும் "குயின்ஸ் பார்க்" வளாகத்திற்கு ஸ்ரீகஜன் தம்பதியையும் மற்றும் நண்பர்களையும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அழைத்துச் சென்றார்.

அங்கு அவர்கள் அமைச்சர்கள் மற்றும் சபை உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடி அவர்களால் வரவேற்கப்பட்டானர் இங்கே காணப்படும் படங்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்திப்பும் உரையாடலும் ஒன்று கூடல் மற்றும் திங்கட்கிழமை ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சந்திப்பு மற்றும் வரவேற்பு ஆகியவற்றில் எடுக்கப்பெற்றவையாகும்.





# இலங்கை "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜனுக்கு கனடிய பாராளுமன்றம் சார்பான வாழ்த்துப் பத்திரத்தை வழங்கிய ஹரி ஆனந்தசங்கரி



இலங்கையின் முதன்மைத் தமிழ்த் தினசரியாக விளங்கும் "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் தனது வெளிநாட்டுப் பயணத்திட்டத்தின்படி நேற்று கனடா வந்து சேர்ந்தார்.

கடந்த சனிக்கிழமை 15ம் திகதி பிற்பகல் கனடாவின் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரியை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.அப்போது திரு ஸ்ரீகஜனுடன் அவரது துணைவியார். கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம். மற்றும் நண்பர் பவான் ஆகியோர் உடனிருந்தனர்.பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி- "வீரகேசரி ஸ்ரீகஜன் ஆகிய இருவரும் இலங்கை கனடா அரசியல். பொருளாதாரம் மற்றும் தமிழ் மக்களின் வாழ்வியல் நிலை ஆகியவை தொடர்ப்பாக உரையாடினார்கள்.



இங்கே காணப்படும் படங்கள் 15ம் திகதி சனிக்கிழமை மாலை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரியை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய போதும் ஸ்ரீகஜன் அவர்களுக்கு பாராளுமன்ற உறுபபினர் கனடாவின் பாராளுமன்றம் சார்பான வாழ்த்துப் பத்திரத்தை வழங்கியபோதும் எடுக்கப்பட்டவையாகும்.

# கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா



கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது அண்மையில் கனடாவிலும் எமது தாயகத்திலும் படமாக்கப்பெற்ற "ஒருத்தி" தமிழ்த் திரைப்படத்தை



தயாரித்த பி. எஸ் .சுதாகரன் அவர்களின் கதையைத் தழுவி ஆங்கிலத்தில் திரைப்படத்தின் கதை ஆக்கித் தந்த எழுத்தாளர் திருமதி சபிதா செல்வராஜா கோ-குலன் இந்த நூலைப் படைத்திருந்தார்.

அழைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவில் அறிஞர் சாமி அப்பாத்துரை. திருமதி கோதை அமுதன் பி. எஸ் சுதாகரன் உட்பட பலர் உரையாற்றினார்கள். நூலாசிரியர் சபிதா அவர்கள் கனடிய வானொலி நேயர்களுக்கு நன்கு அறிமுகமான கோகுலன் அவர்களின் பாரியார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. விழாவில் கலந்து கொண்டகலை இலக்கிய மற்றும் ஊடக நண்பர்களுக்கு பிரதிகள் வழங்கப்பெற்றன.